பதிவு எண் M. 4900 16 பக்கங்கள்.

குடிஅரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 11-6-1949 சனிக்கிழமை } மலர் 40.

தாழ்த்தப்பட்டோர் விடுதலையும் அரசியல் உரிமையும்.

★

"தாழ்க்தப்பட்டோர் விடுதலையும் அரசியல் உரிமையும்". இதை தாழ்த்தப்பட்டோர், விடுதலை, அரசியல், உரிமை என நான்கு வகையாகப் பிரிக்கலாம். இந்த நான்கைப்பற்றித்தான் தனித்தனியாக விளக்க வேண்டியவனாக உள்ளேன். இவைகளை முறையே தனித் தனியாக விளக்கிய பிறகே, இவ்விஷயத்தைப் பற்றிப்பேச ஒருவாறு இயலும். முதலில் தாழ்த்தப்பட்டார் என்பவர் யார்? அவர்களுடைய நிலைஎன்ன? என்பதை எடுத்துக் கொள்வோம்.

தாழ்த்தப்பட்டார் யார்?

தாழ்த்தப்பட்டார் என்பது ஆதித்திராவிடர்கள் என்று சிலர் கருதுகின்றனர். சிலர் பஞ்சமர்கள் என்றும், புலையர்கள் என்றும் இன்னும் இவ்விதமாகக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் தாழ்த்தப்பட்டார் யார் என்றால், தங்களுக்கு மேல் உயர்ந்தவர்களில்லை என்று கருதுகிற ஒரு சாரார் தவிர, ஒருவருக்கு மேல் ஒருவர் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களத்தனை பேரும் தாழ்த்தப்பட்டவரேயாகும் என்பது எமது அபிப்பிராயம். சிலர் ஒரு சாராருக்குத் தாழ்த்தப்பட்டவராகவும், சிலர் இரண்டு பேருக்குத் தாழ்த்தப்பட்டாராகவும், சிலர் மூன்று, நான்கு, அய்ந்து முதலிய பேருக்குத் தாழ்த்தப்பட்டவராகவும் இருக்கின்றனர். பார்க்கின் இவர்கள் யாவரும் தாழ்க்தப்பட்டாரேயாகும். இந்தியாவிலுள்ள 33—கோடி மக்களில் 100 க்கு 2 அல்லது மூன்றுபேர் தவிர மற்ற யாவரும் தாழ்த்தப்பட்டோரே. தனக்குக் கிழ் ஒருவன் இருக்கின்றான் என்பதும், தனக்கு மேல் ஒருவன் இருக்கின்றானென்பதுமேதான் தாழ்த்தப்பட்டார் என்பதற்கு ஆதாரமாகும். உலகெங்கும் ஆராய்ச்சி, அறிவு நிறைந்திருக்கின்ற இந்நிலையில், நமது நாட்டில் மாத்திரம் பிறவியில் தாழ்த்தப்பட்டார் இருக்கின்றனரென்றால்என்சொல்வது? இதற்கு இத்தாழ்த்தப்பட்டார் என்று சொல்லிக் கொள்ளுமிவர்களுக்கு உணர்ச்சியும் சுயமரியாதையும் இல்லாமலிருப்பதுதான் காரணம்?

எத்தகைய செல்வவந்தர்களாயும் அதிகாரம் பெற்றவர்களாயுமிருப்பினும் முடிவில் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் தானே. எத்தனையோ திராவிடர்களுக்கு செல்வமிருக்கிறது, கல்வி இருக்கிறது, அதிகாரமிருக்கிறது, அறிவு இருக்கிறது. என்ன இருந்தும் அவர்கள் "சூத்திரன்" என்கின்ற முறையில் மற்றவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள்தானே. ஏன்? இவர்களுக்குச் செல்வமில்லையா? அறிவில்லையா? அதிகாரமில்லையா? ஜட்ஜுகளாய், மந்திரிகளாய் இல்லையா? யாவுமிருந்தும் இவர்கள் ஏன் தாழ்த்தப் பட்டவர்களாகவே இருத்தல் வேண்டும்? இதைத்தான் நாம் அறிந்து கொள்ள முற்பட வேண்டும். நமது தேசத்தில் தாழ்த்தப்பட்டாரிருப்பதற்குக்காரணங்களென்ன? எந்தக் கோட்டையால் இந்த எண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது? இந்நாட்டில் பல்லாயிரக் கணக்கான வருடங்களாய்ரிஷிகள், மகாத்மாக்கள், தீர்க்கதரிசிகள், அவதார புருடர்கள் பலர் எண்ணிறந்தவர் தோன்றிவந்திருக்கின்றனரே இவர்கள் உலகிற்கோ, சமூகத்திற்கோ செய்ததென்ன? ஏனிவர்களால் இதுவரை இதைப் போக்க முடியவில்லை. ஆகவே ஒருவன் தாழ்த்தப்பட்டவனாய் இருப்பதற்குக் காரணத்தை அறிய வேண்டுமானால் அவன் சுயமரி



யாதை வீரனாக இருக்கவேண்டும். பின்னர் அதைப் போக்க சூரனாக விளங்கவேண்டும். அதுதான் உண்மையான சுயமரியாதையாகும். அப்படிக்கு இல்லாமல் 'இப்பொழுதென்ன செய்வது? அதில் பிறந்தாய்விட்டதே அடுத்த ஜென்மத்திற் பார்த்துக்கொள்வோம்'' என்று கூறினால் அதுதான் முட்டாள்தனம் என்கின்றோம். மற்றும் பகவான் அவனை அப்படிப் படைத்துவிட்டான் என்று கூறுவதை மேலும் மேலும் முட்டாள்தனம் என்பதோடு, அவ்வித உணர்ச்சிதோன்றுவதே கோழைத்தனத்தின் பயன் என்று சொல்லுவேன். இல்லையென்றால் இது வெறும் பித்தலாட்டத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்பேன். இந்து சமூகம் எவ்வளவு பரப்புடையது? எவ்வளவு அளவுடையது? இத்தகைய ஒருபெரும் சமூகம் வெறும் தேசபக்தி என்று சொல்லிக்கொண்டு மனிதனுடன் மனிதன் பேசப்படாது, பார்க்கப்படாது என்பதற்கு ஆதாரமான மதம், கடவுள் என்பதைப்பற்றிப் பேசக்கூடாது என்றால் எப்பொழுது இக் கஷ்டம் ஒழியும்.

விடுதலை என்றால் என்ன?

இனி நாம் விடுதலை என்ற விஷயத்தைப்பற்றி எடுத்துக்கொள்வோம். விடுதலை என்றால் என்ன? அது எவ்வகையில் மக்களுக்கு அனுகூலப்படும் என்பது இங்கு கவனிக்கவேண்டியதாகும். வயிற்றுக்காக வாழ்வது விடுதலையா? உத்தியோகம் பெறுவது விடுதலையா? மனிதன் சமூகப் பொருளாதார வாழ்வில் மற்றவனுக்குத் தாழ்ந்தவனல்லன் என்ற எண்ணம் உதித்து, அது கைகூடிவிட்டால் அதுவேதான் விடுதலையாகும். விடுதலை என்பதற்கு இதுவே தகுந்த பொருளாகும். உங்களுக்கு மேல்—உயர்ந்த ஜாதியார், செல்வந்தன்—அதிகாரி ஆகிய இவர்களிருந்தால் அது ஒருநாளும் விடுதலை என்பதாகாது.

அரசியல் உரிமைகள்.

இன்றைய தினம் அரசியல் உரிமைகள் என்ற விஷயத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால் மந்திரி முதலிய பதவிகள் பெறுவதும், சம்பளம் பெறுவதும் அரசியல் உரிமை என்று கருதப்படுகிறது. எப்படியாயினும் பதவிகள் அடைந்தோம் என்ற உணர்ச்சி அரசியலாய் இப்போது இருந்து வருகிறது. இது அரசியலாகாது. மக்களுக்குள் எவ்வகையிலும் பேதம் இருக்கக்கூடாத மாதிரி சட்டம் செய்து அமுல் நடத்த முடியும்படியான அரசியலே உண்மை அரசியலாகும். அப்படிப்பட்ட அரசியல் இருக்கவேண்டியதவசியம் என்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபமெதுவுமில்லை. சைமன் கமிஷன் வந்த பொழுதுகூட ''தேசபக்தர்கள்'' அதை ''வேண்டாமென்றும்'' திரும்பிப்போ என்றும் கத்துகின்ற சமயத்தில், நான் ஒருவனேதான் முதல் முதலில் வேண்டும், வேண்டுமென்று கத்தினேன், அவர்களை வரவேற்க வேண்டுமென்றவர்கள் நமது கட்சியேயாகும். ஏனென்றால் அதுசமயம் சிலர்சென்று தாழ்த்தப்பட்டோருடைய நிலைமையை அவர்களுக்கு—உலகத்திற்குத் தெரியப்படுத்தவே. அந்தப்படியே பலர் சென்று தெரிவித்தனர். அச்சமயம்தான் உங்களுடைய குறைகளைக் கேட்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கும், உலகத்திற்கும் ஏற்பட்டது. உலக அபவாதத்திற்குப் பயந்தே இன்றைய சர்க்கார் உங்களிடம் அன்பு காட்ட நேர்ந்தது. இதற்கு முன்னர் உங்களுடைய பிரதிநிதிகளெனக் கூறிக்கொண்டவர்கள், எல்லாம் மதத்தின் பேரால் கடவுள் பேரால் பழக்க வழக்கத்தின் பேரால் தங்களை மேல் ஜாதியார் என்று சொல்லிக்கொண்டு திரியும் சுயநலப்பிரதிநிதிகளாகவே இருந்து வந்தார்கள். இவர்களால் என்ன பயனடைந்தீர்கள்? பல எலிகள் கூடிய ஓர் சமூகத்தின் குறைபாடுகளைத் தீர்க்க, ஒரு பூனையைப் பிரதிநிதியாய் அனுப்பியது போலவே முடிந்து வந்தது. நாம் எவ்வுரிமைகளுக்குப் போராடுகின்றோமோ அவைகளை ஏற்கனவே அனுபவித்து ஆதிக்கம் பெற்றுக்கொண்டு வாழும் ஓர் சமூகத்தார் இப்போது அதை இகழ்கின்றனர், வெறுக்கின்றனர். அவர்கள் அனுபவிக்கும் ஸ்தானத்தை மற்றொருவர் விரும்பியபிறகே அந்தஸ்தானம் இழப்படுகிறது. தேசத்துரோகம் என்றும் கூறப்படுகிறது. இங்ஙனம் நம்மைத் தேசத்துரோகிகள் என்று கூறுகின்றவர்களைப் பார்த்து நீங்கள் சிலவற்றைக் கேட்கவேண்டும். அதாவது நீங்கள் அனுபவித்து வந்த போகங்களை நாங்கள் சிறிது அனுபவிக்கின்றோம். அதன் மூலம் நாமிருவரும் சமத்துவமான பின்னர் மேற்கண்ட ''தேசத்துரோகத்தை'' ஒழிக்க இருவரும் முனைவோம். இப்போது நீங்கள் கூறும் தடைகளை, எதிர்ப்புகளை நாங்கள் ஒப்பமாட்டோம். நாங்கள் நீங்களிருந்த இடத்திற்கு வரும் பொழுது தேசத்தின் பேரால், தேசியத்தின் பேரால் சுயராஜ்ஜியத்தின் பேரால் எங்களை ஏமாற்றித் தடை செய்யாதீர்கள் என்று கூறுதல் வேண்டும். இதுவரை ''அரசன் விஷ்ணு அம்சம்'' என்று சொல்லிச் சொல்லியே இவர்கள் சகல போகங்களையும் அனுபவித்து வந்தார்கள். நீங்கள் இப்பொழுது அவர்களை காப்பிஅடிக்கிறீர்கள். இதைக் குற்றம் சொல்ல அவர்களுக்கு யோக்கியதையேது? அவர்கள் எந்த நிலைமையில் உங்களை அடக்கி தாழ்த்தப் பட்டவர்கள் ஆக்குகிறார்களோ அந்நிலைமைக்கு அவர்களைக்கொண்டுவர முயற்சி செய்வது குற்றமாகாது. ஆனால் நான் அப்படிச் சொல்வதில்லை. மற்றென்னவென்றால் எதிர் காலத்தில், நாம் இருவரும் அடையப் போகும் அரசியலுரிமையில் எங்களுக்குப் பங்கெப்படி? என்று தான் கேட்கச் சொல்லுகிறேன். இதைச் சொன்னால் தேசத்துரோகி என்று வசை மொழி பாடுகின்றனர் ''நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப்புல் சுமப்பதுதான் கதி!! என்ற பழமொழிக்கேற்பதான் சுயராஜ்ஜியம். இந்த சுயராஜ்யம் வேண்டாம் அதாவது தோட்டியும், துரையும் இருக்கும் சுயராஜ்ஜியம் நமக்கு வேண்டாம். பல்லக்குதூக்க ஒருவனும், சுமக்க ஒருவனுமிருக்க வேண்டுமென்பதே இப்பொழுது இவர்களுடைய சுயராஜ்ஜிய நோக்கமாகும். ஆனால் நாம் கோரும் சுயராஜ்ஜியத்தில் சங்கராச்சாரி யிருக்கமாட்டார், தோட்டியுமிருக்க மாட்டார் யாரும் மனிதர்களே!

தனித்தொகுதியின் விசேடம்.

பல காலம்கஷ்டப்பட்டு நீங்கள்

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

ஜா முத்தையா
நூலக அறக்கட்டளை

20 ஆண்டுகளுக்குமுன் பெரியார்.

மெட்டிரியலிஸம்.

★

நாஸ்தீகம்.

★

உலகத்திலேயே நாஸ்திகம் என்று சொல்லப்படும் வார்த்தையானது அநேகமாய், பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக் கூடியதாக இருந்து வருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால், அவ்வார்த்தையில் கடவுள் என்பது இல்லை என்கின்ற பொருள் அடங்கியிருப்பதாகக் கொள்வதேயாகும். மக்கள் கடவுள் இல்லை என்று சொல்லப்படுவதைப்பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும், வெறுப்புக் கொள்ளவும் புரோகிதர்கள், பாதிரிகள், மௌல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர, கடவுள் என்பதைப்பற்றிய விளக்கம் யாருக்கும் தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு அது (கடவுள் என்பது) மனத்திற்கும், புத்திக்கும் எட்டாதது என்பதாகவும், அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தானாகவேண்டும் என்றும் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு விட்டது. இப்படி இருந்த போதிலும் என்றையத் தினம் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ அன்று முதலே கடவுள் இல்லை என்கின்ற வாதமும் ஏற்பட்டு, வெகு காலமாகவே இவ்வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு நாளது வரை முடிவுபெற முடியாமலே இருந்து வருகின்றது.

கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும்கூட உலகில் உள்ளன. உதாரணமாக சூனிய மதம், நிரீஸ்வர மதம், உலகாயுதமதம் (Materialism) நாஸ்தீகமதம் என்பன போன்ற பல உண்டு என்றாலும் கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்கின்ற ஒரு கிளர்ச்சி வலுத்து அதை அமுலுக்குக் கொண்டு வந்து மற்றும் உலகமெங்கும் அக்கொள்கையைப் பரப்ப பிரசாரமும் செய்ய ஏற்பாடுகள் சாதாரணமாக இந்த இருபதாவது நூற்றாண்டில்தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிந்து வருகின்றதென்பதாகவும் தெரிய வருகின்றது.

ஏனெனில் இதுவரையில் உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக்கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும், கடவுள் பிரசாரத்தின் பேரால் கௌரவமும், வயிற்றுப் பிழைப்பும் நடத்தி வந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும் மதத்துடனும், கடவுளுடனும் பிணைக்கப்பட்டே இருந்ததாலும், கடவுளை மறுக்கும் அபிப்பிராயத்துக்கோ, கூட்டத்திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு, அவர்கள் மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு அந்த அபிப்பிராயம் வலுக்க முடியாமலும், பரவ முடியாமலும் போய் விட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப்பும், அதிருப்தியும் தரக் கூடியதாயிருந்தாலும் மற்றும் கடவுள் பேரால் அல்லது கடவுள் சம்பந்தமான மோட்சம், சாஸ்திரம், கதை, புராணம், பிரசாரம் ஆகியவைகளின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத்திரத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் நடு நிலையுள்ள அறிஞர்களால் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யத்தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும், அவ்வித அபிப்பிராயக்காரர்களைப்பெரிதும் அறிவாளிகள் என்றும் ஞானவான்கள் என்றும் சொல்லுவதும் மதிப்பதுமாய் இருந்து வருகின்றன. மேல்நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப்படுபவர்களுக்குள் இன்றும் அநேகர் நாஸ்திகர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ருஷியா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கடவுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும், நாஸ்தீகத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றிற்காகப் பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகள் செய்யப்பட்டும் வருகின்றன.

குறிப்பாக அமெரிக்காவில் நியூயார்க் என்கின்ற பட்டணத்தில் "நாஸ்தீகத்தை உலகமெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம்" என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்து அதன் மூலம் 25, 30 வருஷங்களாக நல்ல வேலைகள் மும்முரமாய் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையின்படி அச்சங்கமானது பிரசாரத்திற்காகவும், துண்டுப்பிரசுர வினியோகத்திற்காகவும் வருஷம் ஒன்றுக்கு அய்ம்பது ஆயிரம் ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து வந்திருக்கின்றது. "கிறிஸ்துமதம் வெடிப்புக் கண்டுவிட்டது" என்கின்ற பேராலும், "மதம் என்றால் என்ன?" "கடவுள் என்றால் என்ன" "கடவுள் இல்லாத முற்போக்கு" ஆகிய இவைபோன்ற தலைப்புகளால் பல லட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. சங்க அங்கத்தினர்கள் வருஷத்திற்கு வருஷம் 100-க்கு 50 வீதம் உயர்ந்து கொண்டு வருவதுடன், பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலுங்கூட பிரசாரங்கள் செய்யப்பட்டுவருவதாகக் காணப்படுகிறது. வேறு பாஷைகள் மூலமும் சைனா முதலிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பி இதுபோன்ற பிரசாரமும் துண்டுப் பிரசுரங்களும் நடைபெற்று வந்திருப்பதாகவும் காணப்படுவதோடு ஒவ்வொரு கனவானும் ஒவ்வொரு வேலையை ஏற்றுக் கொண்டு திருப்திகரத்தக்க அளவு பிரசாரம் செய்திருப்பதாகவும் காணப்படுகின்றது. இதன் தலை

மைக் காரியாலயம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்தில் 14-வது வீதி, 307 E நெம்பர் கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. இதில் சேர விரும்பும் அங்கத்தினர்க்கு வருடச் சந்தா ஒரு டாலர் அல்லது மூன்று ரூபாயாகும் என்பதாகவும் காணப்படுகிறது.

இப்படியே லண்டன் பட்டணத்தில் சில ஸ்தாபனங்கள் அதாவது "தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்" என்றும், "அறிவாளிகள் சங்கம்" என்றும், "உண்மை நாடுவோர் சங்கம்" என்றும் பல சங்கங்கள் ஏற்படுத்தி அதுபோலவே பிரசாரமும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சிலவற்றின் வயது 60, 70க்கு மேல் ஆயிருந்த போதிலும் அவைகள் இப்போதுதான் மிக்க பிரபலமாயும், செல்வாக்காயும் நடைபெற்று வருகின்றதாக அறிவிக்கப்படுகின்றன.

இவற்றில் கலந்துள்ள நபர்களில் உலகத்திலேயேமிக்கஅறிவாளிகள், ராஜதந்திரிகள் என்று சொல்லப்பட்ட பெரியோர்களே அதிகமாயிருக்கின்றார்கள். ஆகவே நாஸ்தீகப் பிரசாரம் உலகில் சகஜமாகவும் செல்வாக்காகவும் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவிக்கவே இவற்றை மேற்கோள்களாகக் குறிப்பிட்டோம்.

இனி அதனால் ஏற்படும் கெடுதி என்ன? நன்மை என்ன? என்பவைகளைப் பற்றி யோசிப்போம். சாதாரணமாக மனிதன் நாஸ்தீகனாயிருந்தால் அதாவது கடவுள் நம்பிக்கை இல்லாதவனாயிருந்தால் ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்க மாட்டான் என்றும், திருடு, பொய், மோசம், சூது ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவறிக் கலத்தல், மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்களைச் செய்யப் பயப்படமாட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. இதைப் பற்றிக் கவனிக்குமுன்பு, உண்மையான கருத்தில் இந்தக் கடவுள் நம்பிக்கை உள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கின்றானா? என்பதை முதலில் யோசிப்போம்.

சாதாரணமாக, கடவுள் என்கின்ற பதத்திற்கு மக்களில் பெரும்பான்மையோர்கள் கருதிக் கொண்டிருக்கும் கருத்து என்னவெனில் சர்வ சக்தியும்-அதாவது உலகம் உலகத்திலுள்ள ஜீவராசிகள் புல், பூண்டு, தாவரங்கள் முதலிய யாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு தனது சக்தியால் இயங்கச் செய்யப்படுகின்றதானதும், எங்கும் வியாபித்திருப்பதானதும், சர்வ ஜீவராசிகளையும் ரட்சிக்கும் தன்மையுடையதானதும், எல்லாவற்றையும் சமமாய்ப் பார்ப்பதானதும், சுருக்கமாய்ச் சொல்வதானால் அவனன்றி (அக்கடவுள் சித்தம் அன்றி) ஒரு அணுவும் அசையாததான சக்தியுடையதானது என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இக்கருத்துசரியா, தப்பா என்று யோசிப்பதற்கு முன்னும், இப்படி ஒரு வஸ்து இருக்கின்றதா இல்லையா என்று முடிவு செய்வதற்கு முன்னும், இப்படி மக்கள் எண்ணிக்கொண்டிருப்பதானது உலகத்திற்கு நன்மையா? தீமையா? என்று முடிவு செய்வதற்கு முன்னும், இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனாவது உண்மையில் நம்பி இருக்கின்றானா? அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்தபடி அவனது மனம், மெய், மொழி ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றனவா? அதாவது எந்த மனிதனுடைய நடவடிக்கையில் இருந்தாவது மேற்கண்ட சக்தியும், குணமும் கொண்ட ஒரு வஸ்துவை, நம்பிநடக்கின்ற மனிதனின் நடவடிக்கைகள் இவையென்று கருதும்படியாக இருக்கின்றனவா? என்பதை யோசிப்போமானால், இதுவரை ஒரு மனிதனையாவது அம்மாதிரி நம்பிக்கையின்மீது நடக்கிறான் என்பதாகக் கண்டு பிடிக்கமுடியவில்லை என்றும், அந்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன்கூடத் தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடிவதில்லை என்றும் தான் சொல்லவேண்டி இருக்கிறதே தவிர வேறில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

அதாவது, அப்படிச் சொல்லுவதானது சாதாரண மக்களிடையே மாத்திரமல்லாமல் கடவுள் பிரசாரம் செய்பவர்களிலாவது, கடவுளைக்கண்டவர்களாகச் சொல்லப்பட்டவர்களிலாவது, கடவுளுக்குச் சமமாகக் கருதும் சமயாச்சாரிகள், மதத்தைக் காப்பாற்றும் ஸ்தாபனத் தலைவர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது நாஸ்தீகத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கித் துயரப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் ஆஸ்தீகப் பண்டிதர்கள், சாஸ்திரிகள், வைதீகர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது மற்றும் மகாத்மாக்கள், வேதாந்திகள், பெரியோர்கள் முதலியவர்களுக்குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்ததாகவோ இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு தனி மனிதனென்றும், தனக்காக, தான் செய்யவேண்டிய காரியம் பல உண்டு என்றும், அவற்றைத் தினமும் செய்வதாகவும், அவனவன் இஷ்டப்பட்டபடி செய்துகொண்டும், அதனதன் பலனை அடைந்துகொண்டும், அதுபோலவே மற்றவர்களையும் செய்யும்படி தூண்டிக்கொண்டும், மற்றவர்கள் செய்வதில் குணதோஷம் கற்பித்துச் சொல்லிக் கொண்டும், அதற்காக விருப்பு வெறுப்புக் காட்டிக்கொண்டும், இன்பதுன்ப தக்கமடைந்து கொண்டுந்தான் இருக்கின்றானே ஒழிய, கடவுளின் சர்வ சக்தியைப் பற்றியோ, சர்வ வியாகபத்தைப் பற்றியோ, சர்வ தயாபரத்தைப் பற்றியோ, சர்வ சமத்துவத்தைப் பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே இதிலிருந்து அப்படிப் பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும், இருப்பதாகவும் யாரும் நம்பியிருக்கவில்லை என்றுந்தான் முடிவு கட்டவேண்டியிருக்கின்றதென்பது ஒரு பக்கமிருந்தாலும், அப்படி ஒன்று இருப்பதாகக் கற்பித்து நம்பச் செய்வதினாலாகிலும், காரியத்தில் ஏதாவது-அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படக்கூடும் என்று கருதுகின்ற முன் சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா? என்று பார்த்தால் திருடாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை வஞ்சிக்காதவன், முறைதவறிக் கலவி செய்யாதவன், பிறருக்கு இம்சை கொடுக்காதவன் முதலான காரியங்கள் செய்யாதவன் என்பவன் என்கிற ஒருவனைக்கூடக் காணமுடிவதில்லைஎன்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது. அன்றியும், திருட்டு வஞ்சகம், பொய், முறைதவறிக்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

ராஜா முத்தையா நூலக அறக்கட்டளை

★ துரோகி! ★

போர்! போர்!! பெரும்போர் நடந்து கொண்டிருந்தது. அரசியல் போரல்ல. உணர்ச்சிப்போர். எழுச்சிப்போர். பலமிக்க இரு எதிரிகளிடையே மூண்டது அப்போராட்டம்!

எதிரிகளில் ஒருவன் கோழை. ஆனால் மகா தந்திரசாலி. மற்றொருவனோ தந்திரமறியான், நேரடித் தாக்குதலில் மிகவல்லவன்.

இந்தப் போரை யாரும் கண்ணால் காணமுடியாது. ஏன், வேறு யாருக்கும் தெரியவும் தெரியாது. ஏனென்றால் இது நடந்த இடம் அப்படிப்பட்டது.

அவள்—ராதா—உள்ளம் போர்க்களமாகியிருந்தது. சாஸ்திரம், சமூகப்பழி இரண்டின் கூட்டுத் தாக்குதலோடு, இயற்கையுணர்ச்சி மோதிக்கொண்டிருந்தது. அவள் மென்மை உள்ளம் அவைகளின் ஆர்ப்பாட்டங்களைத் தாள முடியாமல் தவிதவித்தது. எப்பொழுது இந்தப் போராட்டம் நீங்கி சாந்தி நிலவும் என்பதே முடிவுகட்ட இயலாத ஒரு சங்கதியாக இருந்தது.

முடிவும் கட்டிவிடலாம். அதற்கு ஒரே வழிதான் உண்டு, இருசாராரையும் பாதிக்காமல் அதனை நிறைவேற்ற. அதுதான் அவைகள் போர் நிகழ்த்திக் கொண்டிருக்கும் உள்ளத்தைத் தாங்கும் அவள் உடலையே அழித்துவிடுவது! சே, மூட்டைப்பூச்சிக்குப் பயந்து கொண்டு வீட்டைக் கொளுத்துவதா? எங்கோ இருநாடுகள் யுத்தம் செய்கின்றன என்பதற்காக உலகத்தையே நிர்மூலமாக்கிவிடுவது போன்றதல்லவா அந்த அறிவற்ற செய்கை! இதை நினைத்துத்தான் அவள் வாழ்ந்து வந்தாள்.

அந்தப் போராட்டம் தானாக ஏற்படவில்லை. அதற்கு ஆதிகர்த்தாவும் அவள்தான். முதலில் இயற்கை உணர்ச்சி அவள் மீது வாள் வீசிற்று. அதைச் சமாளிக்க இரண்டாம் போர் முனையாக சாஸ்திரமாகிய தாளை அவள், முன் நிறுத்தினாள். இப்பொழுது அந்த வாளும் தாளும் போடும் போடு அவளை அந்தப்பாடுபடுத்திற்று.

போராட்டத்திற்குக் காலம் என்பதில்லை. காரியஸ்தன் கண்ணன் அவள் கண்களில் பட்டால் போதும், இயற்கை தன் வேலையைத் துவக்கி விடுகிறது. அப்புறம் சாஸ்திரம் அதனோடு முட்டுகிறது. இதென்ன வேதனை! ஈசா, சிவகாமி நேசா! ஏழையை ஏன் சோதனை செய்கிறாய் இவ்வாறு, என்று புலம்பிக் கண்ணீர் விடுவாள் ராதா, மனவேதனை உச்ச நிலையை எட்டிய போதெல்லாம்.

இயற்கையுணர்ச்சி சொல்லியது:—ஏழை ராதா, ஏன் உன் கண்கள் இப்படி சிவந்து வீங்கியிருக்கின்றன. நேற்றிரவெல்லாம் கண் மூடாது தலையணையை நனைத்துக் கொண்டிருந்தாய் போலிருக்கிறது. போடி போ, பைத்தியமே. கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு...........சே அது பழமொழி, புது மொழியாகச் சொல்ல வேண்டுமானால் திராவிடத்தில் வளமெல்லாம் வைத்துக் கொண்டு வாட்டந் தீரவில்லையென்று டில்லிக்குச் சென்றழும் சென்னை சர்க்காரைப் போல, ஏன் மயங்கிக் கொண்டிருக்கிறாய்?

அத்துடன் விடவில்லை, மேலும் கேட்டது;—நேற்றிரவு முழுதும் உன் கணவன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்திருந்திருப்பாயே, வந்தானா அந்தக் கிழவன்? எங்காவது கந்த புராண காலட்சேபத்தைக் கேட்டுவிட்டு அவனது அறையிலேயே அசந்து போயிருப்பான். வந்தால்தானென்ன, லைலா—மஜ்னு அல்லது ரோமியோ—ஜூலியத் போன்றா இரவைக் கழித்திருப்பீர்கள்? கிழவன் நரை திரண்டு; உடல் வளைந்து, தோல் சுருங்கி கண்கள் சோபையிழந்து, நடை தளர்ந்து காணப்படுகிறான். வயது என்ன கொஞ்சம்தானா? ஆறு பத்துக்கு ஐந்து குறைவு. நீ பதினாறு முற்றுப் பெற்ற எழிலரசி. இப்பொழுது பூத்த மலர்—அவன் பழுத்த கனி. நீ பசிய இளந்தளிர் கொண்ட கொடி—அவன் வாழ்ந்து சலித்து விழுதுவிட்ட ஆலமரம். ஏண்டி எங்கே பொருத்தமிருக்கிறது? அவனிடம் இன்பத்தை எதிர்பார்க்கிறாயே, கிடைக்குமா? கதிரோனிடத்திலே நிலவின் குளுமையும், பாலைவனத்திலே இனிய சோலையும் உண்டென்றால் உன்னைத் தவிர யார் நம்புவார்கள்?

உடனே சாஸ்திரம் தன் ஓலைக் கட்டை ஒரு தட்டு தட்டியது. ஒரு மணங்கு தூசி பறந்தது. கட்டியிருந்த நூலை அவிழ்த்துவீசியது, சுளீரென்று சாட்டையைப்போல் "ஏ, ராதா இங்கே பார்" என்று தன் வறண்ட கடுமையான குரலில் கூப்பிட்டது.

அவன்—இயற்கை—பேச்சைக் கேளாதே. துன்மார்க்கன். எத்தனையோ பெண்களைக் கெடுத்திருக்கிறான், இதேபோல் சொல்லிச் சொல்லி. உன் கணவனைப் பற்றி எவ்வளவு கேவலமாகப் பேசுகிறான். என்னதான் இருந்தாலும் ஓம குண்டத்தின்முன் அய்யர் மந்திரம்சொல்ல, வானோர் பார்த்திருக்க உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கிறான். இதோ இந்த ஏட்டைப் பார், என்ன சொல்கிறது. 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'. அருந்ததி பார்த்தாயே, அந்த மாதிரி நீயும் இருக்க வேண்டாமா, இல்லாவிடில் உன் வம்சத்தையே கருவறுத்துவிடுவாள். கட்டிய கணவன், அவனுக்கு என்னகுறை. உன்னை எவ்வளவு அருமையாக நடத்துகிறான். உன் நிலைமை என்ன, திருமணத்திற்கு முன்பு? உன் அந்தஸ்தை ஒத்த ஒரு வாலிபனை மணந்து கொள்வதாகவே வைத்துக் கொள். இந்த மாதிரி 'பெங்கால் சில்க்' புடவையும், 'பாரிஸ் சென்டும்' 'ஸ்பிரிங்' கட்டிலும், பழவகைகளுடன் உணவும், எடுபிடிக்கு ஆட்களும் கிடைத்திருக்குமா? இதல்லடி சொகுசான வாழ்க்கை! கெடுமதியாளன் இயற்கையின் பேச்சைக் கேட்காதே. அவ்வளவுதான் சொல்வேன் என்றது.

ஸ்ரீமான் சாஸ்திரத்தின் நீர்த்த உபதேசம் ராதாவுக்கு சரியெனப்பட்டது. மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு இனிமேல் தன் கணவனே தெய்வம் என்று பணிவிடை செய்ய ஆரம்பித்தாள். ஆனால் தோழர் இயற்கை சும்மா இருக்கவில்லை. மறுபடியும் ராதாவின் மனதைக் குடைய ஆரம்பித்தார்.

இயற்கை ஒரு கேலிச் சிரிப்புடன் உரைத்தது. ஊம், ஏட்டை எடுத்துக் காட்டினானா சாஸ்திரம். என்னையும் கெடுமதியாளன் என்று சாட்டையடித்திருப்பான் சொற்களால். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்றானே, கல்லுக்கும் புல்லுக்கும் மலர்ந்து விரிந்த மல்லிகையைப் போன்ற பெண்ணாகிய உனக்கும் பொருத்தம் ரொம்ப சரி என்று அவன்தானே உன் திருமணத்திற்கு முன்பு கூறியவன். இப்பொழுது ஏட்டின் வேறு புறம் திருப்பிக் காட்டி உபதேசிக்கிறானா பித்தலாட்டக்காரன்! அதுதான் அவனது இயல்பாயிற்றே. குள்ளநரித் தன்மையில் கைதேர்ந்த புலியல்லவா அவன்.

ராதா, அதோ போகிறானே, கண்ணன், அவனது உடல் கட்டைப்பார். கட்டையேறத் தயாராயுள்ள உன் கணவனை அவனோடு ஒப்பிட்டுப் பார். அவனது உயர்ந்த தோள்களைத் தழுவ உன்கைகள் தினவெடுக்கவில்லையா? அவனது கண்களை

பத்திரிகைகளுக்கு விளம்பர வரியா?

எந்தக் கொள்ளை வியாபாரத்துக்கும் பின்வாங்காத முறையில், விளம்பரத்திலேயே பத்திரிகை நடத்தி விளம்பரத்தினாலேயே லட்சாதிபதிகள் ஆகிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களும்—பனியாக்களுமான தேசியப்பத்திரிகைக்காரர்கள், சர்க்கார்விளம்பரத்திற்கு வரி என்றவுடன்வேண்டாமென்று கூறிப் பார்த்தனர். சர்க்கார் செவி சாய்க்க வில்லை.

மந்திரிகளைப் பற்றிய எந்தச் செய்தியையும் நாங்கள் போடமாட்டோம். இதோ! பிடி சாபம் என்று மிரட்டினார்கள் பின்பு.

அய்யோ, வேண்டாம்! வேண்டாம்!! அப்படி யெல்லாம் உங்கள் வார்த்தையைக் கேளாமல் நாங்கள் என்ன வரியா போட்டு விடுவோம் என்று கூறுகிறார் கோபால்ரெட்டி மந்திரியார். இந்தச் சாபமெல்லாம் மலையேறி விட்ட காலம் என்கிறார் பிரதமர், ஓமந்தூராரோடு கோயில்பட்டியில் பேசிய போது. எப்படிமுடியப்போகிறதோ பொறுத்துப்பார்ப்போம்.

ஏன் இந்தப் புரளி!

என் விஷமக் கண்களுக்கே ஒன்றும் தெரியவில்லை.

"வேலைக்காரி" சினிமாவைக் கண்டு கண்டு வேதனையடைந்த பார்ப்பனர்கள் செய்த விஷம வேலைகளை நாடறியும். இதனால் திராவிடரின் தீராவிரோதிகள் என்று காட்டிக் கொண்டு வரும் தோழர்களான பக்தவத்ஸல மந்திரியும், மாதவமேன மந்திரியும் போலீஸ் கமிஷனர் கூடப் போய் பார்த்துவிட்டு இந்த மாத 7-ம் தேதி "அப்படியெல்லாம் அந்தப் படத்தில் ஒன்றும் தவறில்லையே" என்று கூறியிருக்கிறார்கள்.

திலிருந்து அள்ளிப் பருகிக்கொள். ஆனால் வெளியே தெரியவேண்டாம். என் மானமே போய் விடும் நான் செய்த பெருங்குற்றத்தை நானே ஒப்புக்கொண்டதால் அதை மட்டும் உறுதியாக்கு" என்று கெஞ்சினான், கிழவன்.

இது கூடவா அவளால் செய்ய முடியாது? அப்படியே ஆகட்டும் என்றாள் ஆனந்தத்துடன்.

ரோஜா முத்தையா

வரிமேல் வரி!

சுயராஜ்ஜிய வளர்ச்சிக்கு அளவு கோல்!

இந்த நாடு சுயராஜ்ஜியமடைந்ததென்று சொல்லியது முதல், இந்த நாட்டு மக்கள் வேறு எந்தப்படியான புது நன்மையும் அடைந்துவிடவில்லை என்றாலும், புதுப் புது வரிகளும், பழைய வரிகளில் ஒன்றுக்கு ஒன்றரை, ஒன்றுக்கு இரண்டு வீதமும் கொடுக்கும்படியான (பிழிந்தெடுக்கும்படியான) "பெரும் நன்மையை" செய்யத் தவறவில்லை என்கின்றனர் நம் மாகாண சர்க்கார்.

வரி வளர்ச்சிக்கு அவர்கள் தரும் பட்டியல் இது:—

ஒன்றுக்கு இரண்டேகால்

முந்திரிப் பருப்பு, மிளகாய் வற்றல், தேங்காய், காப்பிக் கொட்டை, எண்ணெய் வித்துக்கள், மிளகு, உருளைக் கிழங்கு, ரப்பர், கரும்பு, மஞ்சள் ஆகியவைகளுக்கு முன்பு ரூபாய்க்கு 2. தம்பிடி இனி 4½ தம்பிடிகள்.

புதுப்புதுப் வரிகள்.

1) ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், உணவு விடுதிகளில் விற்கப்படும் பலகாரம், பான வகைகளுக்கு முன்பு விற்பனை வரி இல்லை. இனி ரூபாய்க்கு 4½ தம்பிடி வரி.

2) பருத்தி விற்பனைக்கு முன்பு வரி இல்லை. இப்போது ரூபாய்க்கு 3. தம்பிடி வரி.

3) தோட்டக்காரர்கள் விற்கும் தேயிலைக்குமுன்பு வரிஇல்லை. இனி அந்தக் கட்டத்திலும் விற்பனை வரியுண்டு.

4) சென்னை சினிமாக்கள் ஒவ்வொரு காட்சிக்கும் 5 ரூபாயும், பெரிய முனிசிபாலிட்டியிலுள்ள சினிமாக்கள் ஒவ்வொரு காட்சிக்கும் 4 ரூபாயும், சிறிய முனிசிபாலிட்டியில். உள்ள சினிமாக்கள் ஒவ்வொரு காட்சிக்கும் 3 ரூபாயும் மற்ற இடங்களில் ஒரு காட்சிக்கு 2 ரூபாயும், தமாஷா வரி கொடுப்பதோடு புது வரிகளாய்க் கொடுக்கவேண்டும்.

பட்டியல் முற்றுப்பெறுமா?

யார்கண்டது? அவர்களுக்கே அது தெரியாதே.

விடுதலைசெய்!

தலைவருக்கு மட்டும் மாம்பழம்.

சோஷியலிஸ்ட் தலைவர் டாக்டர் லோஹியாவையும் ஏனைய 46 சோஷியலிஸ்டுகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனக்கோரி 6—6—49ல் சுமார் 50 கட்சித் தொண்டர்கள் அ. நி. சபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்பு சிறைச்சாலைகளுக்கும் சென்று ஆர்ப்பரித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. 8-6-49-ல் முதல் மந்திரி பண்டித நேரு அவர்கள் தோழர் லோகியாவுக்கு மட்டும் ஒரு மாம்பழப் பார்சலைச் சொந்தச் சிப்பந்தியின் மூலம் கொடுத்தனுப்பினார்.

பேச்சில்லை! முழக்கமில்லை!! திருமணம் நடந்தது.

காலி என்கிற ஊரில் இந்த மாதம் 6ந்தேதி ஒரு பதிவுத் திருமணம் செய்து கொள்ள வந்த மணமக்கள் ஒரு பேச்சுக்கூடப் பேசவில்லை.

"இவரை மணந்து கொள்ள இஷ்டமா?" இது ரிஜிஸ்திரார் கேள்வி.

"ஆம்!" அவர்கள் பதில், ஆனால் எழுத்தில்.

மணத்திற்குச் சாட்சிகளாய் வந்தவர்கள் நால்வர். அவர்களும் எழுத்திலேயே எல்லாம் பேசினார்கள்.

திருமணத்திற்கு உரிய பதிவுச் சம்பிரதாயங்கள் எல்லாமுமே, இப்படியாக எழுத்திலேயே நடைபெற்றன. ஒரு வார்த்தைகூட ஒருவரும் பேசவில்லை.

வேறு ஒன்றுமில்லை, மணமக்களும் ஊமைகள்! சாட்சிகள் நால்வரும் ஊமைகள்!!

மணவிழா.

திண்டுக்கல் 8-6-49.

12—6—49ல் தோழர்கள் எம். எஸ். கேசவன், தமிழரசி வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் தங்கவேலர் தலைமையில் சண்முகநதி பழனி ஆற்றங்கரை மணத்

குடி அரசு

11—6—49 சனிக்கிழமை.

மித்திரன் காலித்தனம்!

—o—

"ஊருக்கு ஒரு வழி என்றால் ஒன்றரைக் கண்ணனுக்கு ஒரு வழி என்று சொல்லுவதுண்டு. தென்னிந்தியாவுக்கு இந்தத் தனிப் பெருமை (குருட்டுத் தன்மை) வாங்கிக் கொடுப்பதுதான், தற்போது இங்கு அதிகாரம் செலுத்துவோரின் (திராவிடமந்திரிகளின்) ஆசை!"

அதாவது சென்னை மந்திரி சபையில் உள்ளவர்கள் குருடர்களாய் நடந்து கொள்கிறார்கள். அதனால் சென்னை மாகாணத்துக்கே ஒரு களங்கம்.

இவர்கள் "தனி வழியில் செல்ல, அவர்கள் சொல்லும் வாதம் மிகக் குயுக்தியானது"

அதாவது சென்னையிலுள்ள திராவிட மந்திரிகள், மற்ற மாகாணங்களோடு கருத்து ஒற்றுமையில்லாமல் வேறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அவர்கள் சொல்லும் வாதம் யுக்திக்கு—அறிவுக்கு மாறுபட்டது. இதைப் பார்க்கும்போது இவர்கள் குயுக்தி வேலைக்காரர்கள்—அறிவுக்கு மாறுபாடான அறியாமைச் செயலைச் செய்பவர்கள். சுருக்கமாக அழிவு வேலைச்காரர்கள்.

"தென்னிந்தியாவில் அதிகாரம் வகிப்பவர்களின் தனி சொரூபம் வெளியாகியிருக்கிறது."

அதாவது திராவிட மந்திரிகள் வேஷக்காரர்கள். அவர்கள் பல வேஷமும் போடுவார்கள். உண்மையான அவர்களின் சொரூபம் இது என்று கண்டுபிடிக்கமுடியாது. இப்போது வேஷங் கலைந்து உண்மை சொரூபம் வெளிப்பட்டுவிட்டது.

"சென்னை சர்க்கார் பேசுவது ஒரு கள்ள வாதமே"

அதாவது திராவிட மந்திரிகள் நயவஞ்சகர்கள், கள்ள உள்ளமுடையவர்கள், திருட்டுப் பேச்சுப் [illegible]

திராவிட மந்திரிகள்—இன்று தென்னிந்தியாவில அதிகாரத்திலுள்ளவர்கள் குருடர்கள், அறிவற்ற குயுக்திக்காரர்கள், வேஷம் போட்டு நடிப்பவர்கள், திருட்டுப் பேச்சுப் பேசுகிறவர்கள். இத்தியாதி, இத்தியாதி.

இப்படி யார் கூறியது? எப்போது கூறியது? எதற்காகக் கூறியது? ஏன் இந்த ஆணவ அடங்காப்பிடாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது? என்றெல்லாம் இதைப் பார்க்கும் போது கேட்கத்தான் தோன்றும்.

ஆனால் பார், எப்படி, நடவடிக்கை எடுக்கமுடியும்? பூனையைப் புலியாக எண்ணிக்கொண்டு சிங்கங்கள் எல்லாம் சிறு எலியாகவும் தங்களைக் கருதிக் கொண்டிருந்தால் புலியின் மீது எலி நடவடிக்கை எடுக்க முடியுமா? அல்லது நினைக்கத் தான் முடியுமா?

இந்த மாதிரி போக்கிரித் தனமான பேச்சு, சொல்லப்போனால் வடிகட்டின அயோக்கியத்தனமாக வேறு யார் பேசமுடியும்? பார்ப்பனர்களைத் தவிர, பார்ப்பனச் சுய ஜாதி மித்திரனை தவிர.

மித்திரன்தான் இந்த மாதம் 6ந் தேதித் தலையங்கத்தில், சென்னைத் திராவிட மந்திரிகளை இவ்வாறு அர்ச்சித்திருக்கிறது. அர்ச்சித்த அர்ச்சனையில் நமக்குக் கேட்டிருப்பவை இவ்வளவு. அதாவது எழுத்தில் எழுதியிருப்பது இவ்வளவு. இன்னும் எவ்வளவோ அவர்கள் நாள்தோறும் அர்ச்சித்துக் கொண்டிருப்பது? அதாவது எழுத்தில் எழுதாமல் பாடிக் கொண்டிருக்கும் வசை புராணம் எவ்வளவோ?

எதற்காக இந்த 'மித்திரன்' இந்தக் காலித்தனமான தோரணையில் இறங்கி இருக்கிறதென்றால்,

பார்ப்பன—பனியாக்களின் ஏகாதிபத்திய பீடம் (டெல்லி மத்திய சர்க்கார்) உத்தியோகங்களிலும் மற்ற பொதுத் துறைகளிலும் கையாளப்பட்டுவரும் வகுப்புவாரி நியமன முறையை ஒழிக்கவேண்டுமென்று விரும்பியபோது, விரும்பிய மாத்திரத்தில் ஒழித்துவிடக் கூடாது என்று எண்ணிக்கொண்டு, வெள்ளைக்காரர்கள் கையாண்ட தந்திர முறையை மேற்கொண்டு ஒருகமிட்டியைநியமித்தது. கமிட்டி அங்கத்தினர்களை நியமித்த முறையும் அதே வெள்ளையர்கள் முறையில். அதாவது இந்த நாட்டுப் பிரச்னையைத் தீர்க்க, இந்த நாட்டுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத வெள்ளையர்களையேகமிட்டி அங்கத்தினர்களாய்ப் போட்டுவந்ததைப்போல, இந்த ஆட்சி பீடமும் நூற்றுக்கு நூறு வடநாட்டுப் பனியாக்களையே கொண்டு, ஜாதியுணர்ச்சியால் அலைக்கழிக்கப்பட்டு சின்னாபின்னமாய்க்கிடக்கும் திராவிடத்திற்கும் சேர்த்து, அந்த நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாத பனியாக்களை, நிலைமையை ஆராய்ந்து பரிசீலனை செய்ய என்று, கமிட்டி நியமித்தார்கள். அதற்குப் பெயர்தான் 'திவாகர்' கமிட்டி. அந்தக் கமிட்டியின் முன்பு சாட்சியம் கொடுத்தபோதுதான், சென்னை மாகாண சர்க்கார், வகுப்புவாரி நியமன முறையை இந்த மாகாணத்தைப் பொறுத்த மட்டிலும், நிலைமை சீர்படும்வரை விட்டுவிடமுடியாது என்று கூறி இருக்கிறார்கள். வேண்டுமானால் அதற்கு ஒரு காலம் குறிப்பிடலாம் என்றும், பின்பு அந்த முறையைக் கைவிட்டு விடலாம் என்றும் கூறியிருக்கிறார்கள். மாகாண சர்க்கார் மாத்திரமல்ல, திராவிடத்திலுள்ள சமஸ்தான சர்க்கார்களும் மாகாண சர்க்கார் கருத்தையே வலியுறுத்தி இருக்கின்றன. இதைக் கேட்டுத்தான் மித்திரன் இப்படிஉளறியது. ஆனால் சமஸ்தான சர்க்கார்களைப்பற்றி அது ஏனோ குரைக்கவில்லை.

வகுப்புவாரி நியமன முறை இருக்கவேண்டுமென்று சொல்லுகிற சென்னை சர்க்கார்; நியமன முறையை விட்டு விடுவதானது வகுப்புப் பூசல்களுக்கே இடமாக முடியும், ஆதலால் ஒரு கால வரையறையைக் குறிப்பிட்டு, எல்லா வகுப்பினரும் எல்லா உத்தியோகங்களிலும்—பொதுத்துறைகளிலும் ஏற்ற இடத்தைப் பெற்ற

பிறகு வேண்டுமானால் இந்த முறையை விட்டு விடலாம் என்று கூறுகிறார்களாம்; இதைக் கேட்டுத்தான், நான் இந்தக் காலித்தனத்தில் இறங்கினேன் என்கிறது மித்திரன்.

வகுப்புவாரி நியமன முறை கூடாது என்பதற்கு, வகுப்புவாரி அடிப்படையில் முற்போக்கு அல்லது பிற்போக்கை நிர்ணயிப்பது என்பது ஒரு சிலரது சுயநல வளர்ச்சிக்கே உதவ முடியும் என்று காரணம் கூறுகிறது மித்திரன்.

ஜாதிகளும் வகுப்புகளும் இருந்துவரத்தான் வேண்டும். ஆனால் அதற்காக வகுப்புவாரி நியமனமுறை இருக்கவேண்டுமென்பது என்ன அவசியம்? என்றும் கேட்கிறது.

குடிகாரர்களுக்குப் பயந்து குடி ஒழிப்பைக் கொண்டுவரவில்லை என்று சொன்னால் அது எவ்வளவு நகைப்புக்கு இடமோ அப்படித்தானே வகுப்புக்களுக்காக, வகுப்புவாரி நியமனமுறை இருக்க வேண்டும் என்று கூறுவதும் ஆகும் என்று கேட்கிறதுமித்திரன்.

மேலும் 'ஜமீன் ஒழிப்பு,' 'அறநிலையப் பாதுகாப்பு' மசோதாக்கள் கொண்டு வரும் போது அவற்றால் ஜமீன்தாரர்களும் பார்ப்பனர்களும் பாதிக்கப்பட்டார்களே, அப்போது ஏன் இந்த வாதம் செய்யவில்லை என்கிறது மித்திரன்.

எதற்காக வேண்டுமானாலும், விரும்பினால் மித்திரன் கும்பல் காலித்தனத்தில் இறங்கட்டும். அதன் பலனையும் அநுபவிக்கட்டும். நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உள்ள பல நூற்றுக்கணக்கான வேற்றுமைகளில், திராவிடத்தில் குடியேறிய பார்ப்பனர்களால், இந்நாட்டில் பரப்பப்பட்டு நிலைநிறுத்தப்பட்டுவரும் ஜாதிகள் அமைப்பு வடநாட்டில் காணமுடியாதது. இதன் கொடுமையை அங்குள்ளவர்களால் உணர்ந்து கொள்ளவும் முடியாது. அங்கு இந்து—முஸ்லீம்— தாழ்த்தப்பட்டார்—சீக்கியர் வேற்றுமை, பிளவு என்று சொல்லப்படுவதைப்போல, பிளவுணர்ச்சி காணப்படலாமே ஒழியத் திராவிடத்திலுள்ள, இந்துக்கள் என்று சொல்லிக் கொள்கி

படும் ஜாதித் திமிரை அங்கு காணமுடியாது. காரணம் அங்கு குடியேறிய பார்ப்பனர்கள், ஓரளவாவது சமத்துவமாக நடந்து கொள்ளவேண்டும் என்கிற அவசியத்தில் இருந்ததால். இதனால் தான் மற்ற மாகாணங்களில் நிவாகர் கமிட்டி உண்மையிலேயே பணியாற்ற முடிந்தாலும், திராவிடத்தைப் பொறுத்தவரையில் அது சிறிதும் தகுதியற்றது என்று நாம் குறிப்பிட்டது.

வகுப்புவாரி அடிப்படை நியமனம் அந்தந்த வகுப்பிலுள்ள சிலரது சுயநலத்துக்கே தவிர வேறென்ன என்று கேட்கிறது மித்திரன்.

இதை நாம் அடியோடு மறுக்கவில்லை. ஓரளவு உண்மை இருக்கிறது என்றே ஒப்புக் கொள்வோம். அதனால் அந்தந்த வகுப்பின் பேரால் வகுப்பிலுள்ள சிலர் சுயநலமடைகிறார்கள் என்பதற்காக, அந்தந்த வகுப்புகளுக்குச் சம்பந்தமே யில்லாத, அந்தந்த வகுப்புகளை வெறுத்து, இழித்துப் பேசி வரும் பார்ப்பனர்கள், அந்தச் சுயநலத்தையடைய வேண்டும் என்று கேட்பது என்ன நியாயம்?

ஜாதிகளும் வகுப்புகளும் இருந்துவரத்தான் வேண்டும், ஆனால் வகுப்புவாரி நியமனமுறைகூடாது என்றால் இந்த வாதத்தை என்ன வாதம் என்று சொல்வது என்று கேட்கிறோம்.

மதுவிலக்குக்கு எவ்வளவு நியாயமுண்டோ அவ்வளவு நியாயம் வகுப்புவாரி நியமன ஒழிப்புக்கும் உண்டு என்கிறது மித்திரன். மித்திரனின் அறிவை எதற்கு ஒப்பிடுவது என்றே நமக்குத் தெரியவில்லை.

மதுவிலக்குக்கு எவ்வளவு நியாயமுண்டோ, அவ்வளவு நியாயம்— அதைக்காட்டிலும் அதிகமான நியாயம் வகுப்புவாரி நியமனத்தைக் காப்பாற்றுவதில் இருக்கிறது என்பதை அது எப்படி உணர்ந்து கொண்டிருப்பதாய்க் காட்டிக் கொள்ள முடியும்?

ஏமாந்த காலத்தையே தங்களுக்கு ஏற்றமாகக் கொண்டு வாழும், மடப் பூனைகளுக்கும் கோயில் பெருச்சாளிகளுக்கும் அரண்மனை உடும்புகளுக்கும் வக்காலத்து வாங்கி, அற நிலையப்

யோடு, வகுப்புவாரி நியமன ஒழிப்பையும் ஒத்திட்டுப் பேசுவது மித்திரனின் எந்தக் குணத்தைக்காட்டுகிறது?

கொள்ளையடிப்பவர்கள் கொள்ளையடிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றால், கொள்ளையடிப்பது சட்டவிரோதமென்றால், கொள்ளையடிப்பவர்களுக்கு வயிற்றெரிச்சலாய்த்தானிருக்கும். அது போலவே பகற் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கோயிற் பெருச்சாளிகளை, மடப்பூனைகளை, அரண்மனை உடும்புகளை, அவற்றின் கொட்டத்தையடக்கி, அவர்களின் கொள்ளையடிப்புக்கு எவ்விதத் தண்டனையுமில்லாமல், "போனதெல்லாம் போகட்டும் இனிமேலாவது மற்றவர்களை வஞ்சியாமல் வாழுங்கள்" என்று கூறி சட்டம் செய்ய ஆரம்பித்தது, வயிற்றெரிச்சலைத் தந்தால் அதற்கு யார் என்ன செய்வது? அந்தந்த வகுப்புகளே நன்மையடைய வேண்டும் இல்லாவிட்டால் அந்தந்த வகுப்பிலுள்ள சிலராவது நன்மையடைய வேண்டும் என்கிற ஏற்பாட்டுக்கும், கொள்ளையடிப்பவர்கள் கொள்ளையை விட்டுவிட வேண்டும் என்கிற ஏற்பாட்டுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்க முடியுமா?

ஜாதிகளை ஒழிப்பதில், வகுப்புகளைத் தொலைப்பதில் திராவிடக் கழகம் கொண்டிருக்கும் தீவிரமான கருத்தைக் கழகத்தின் பரம விரோதியான வடநாட்டினரும் அறிவார்கள். உண்மையாகவே ஜாதிகள் ஒழிந்து வகுப்புகள் மறைந்து, மனிதன், மனிதன் என்கிற ஓரேசமம் என்கிற நிலையை, இந்த நாட்டில் காண வேண்டுமென்பதில் நம்மைப் போல் மகிழ்ச்சியடைபவர்கள் வேறு யாருமே இருக்க முடியாது. ஆனால் ஜாதியை ஒழிக்க வகுப்புவாரி நியமன முறையை விட்டுவிடுவதா வழி?

ஒரு வேளை மித்திரன் இப்படி நினைக்கலாம். வகுப்புவாரி முறை இருப்பதினால்தானே சூத்திரத் தேவடியாள்பிள்ளைகளும் படிக்கிறதுகள், படித்தபின் உத்தியோகம் வேண்டுமென்கிறதுகள், உத்தியோகம் இல்லை என்றால் எங்கள் வகுப்புக்கு எங்கே வீதாச்சாரம் என்கிறதுகள். இதுகளைப்

டுக்காவிட்டால் என்ன செய்ய முடியும்? அதற்கு இந்த வகுப்பு வாரி யொழிப்பு பயன்படாதா என்று. இந்த எண்ணத்தைத் தவிர மித்திரனுக்கு வகுப்பு முறை நியமனத்தை ஒழிக்க வேண்டுமென்பதற்கு வேறு எண்ணம் இருக்கமுடியாது.

'இராம ராஜ்ஜியம்' வேதகாலம்' என்று பேசி விட்டுக் கண்ட கனவில்தான் இந்த எண்ணம் தோன்றியிருக்கமுடியுமே தவிர, வேறு சுயபுத்தியில் இந்த எண்ணம் தோன்றியிருக்க முடியுமென்று எப்படிச் சொல்லமுடியும்?

தனக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதி வேண்டும் என்கிற மனுநீதிப் பரம்பரையினர், குருட்டுப் போக்கில் சென்று குருடர்களாய் விளங்குவதும், குயுக்திக்காரர்களாய்க் காணப்படுவதும், நய வஞ்சகர்களாய் நேரத்திற்குத் தக்கபடி வேஷம் போடுவதும், பக்காத் திருடர்களாய் அகப்பட்டதைச் சுருட்டுவதும் திராவிடநாட்டு வரலாறு கூறும் உண்மைகள்.

இதை மறைப்பதற்காக மித்திரன் மற்றவர்கள்மீது பழிபோட்டு நீலிக்கண்ணீர் வடிக்கிறதென்றால், இந்த இருபதாம் நூற்றாண்டிலா இது செல்லுபடியாகும்? அப்படிச் செல்லுபடியானாலும்கூட நாட்டில் அமைதியைக்கண்டுவிட முடியுமா?

பிரிட்டனில்.

மாணவிகள் சலவை செய்கின்றனர்.

மாணவி, மாணவர்களின் படிப்பிற்குத் தேவைப்படும் பணத்தைச் சம்பாதிக்கும் முறையில் மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் பிரிட்டிஸ் மாணவர் யூனியன் வேலை வாங்கிக்கொடுத்திருக்கிறது.

என்ன வேலை தெரியுமா? ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மூன்று மாதங்களும் மாணவர்களுக்கு விடுமுறையாதலால், அந்த விடுமுறைக் காலத்தில், லண்டனில் உள்ள ஒரு மிகப் பெரிய 'லாண்டரி'யில் கல்லூரி மாணவர்களும் மாணவிகளும் சலவை வேலை செய்யவேண்டும்.

இந்த மாதிரி நம் நாட்டில் நடக்குமா? நடந்தால் வருணாச்சிரமத் [illegible]

இங்கர்சால் சொற்பொழிவு.

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

'தெய்வீகம்' 'கடவுள்' எனப்பட்டவைகளாலோ, அல்லது 'புண்ணிய' ஆவியால் நிரம்பப் பெற்றவர்கள் எனப்படுவோராலோ, அல்லது தெய்வத் தூதுவர்கள் எனக் கொஞ்சம் தம்மைத்தாமே கூறிக்கொள்பவராலோ இவையாவும் செய்யப்படவில்லை. உலகாயுதத்தால் செய்யப்பட்டதாகும். இவைகளைச் செய்த மனிதர்கள் தெய்வ வாக்குப் பெற்றவர்களல்ல. அவர்கட்கு எவ்விதத் தெய்வ வாக்கோ, தெய்வத் தன்மையோ கிடையாது. அவர்கள் புனிதக் கயிற்றிலே கட்டப்பட்டிருக்கவில்லை. தெய்வீகம் அவர்கள் புருவத்தின்மேல் இருக்கவில்லை. அவர்கள் கண்டுபிடிப்பாளர்களாகப் பிறக்கவில்லை; அவர்கள் மூளையைப் பயன்படுத்தி, உண்மையை நுணுகி நோக்கி குறிப்பு எடுத்துக் கொண்டார்கள். சிந்தனையில் அவர்கட்கு நம்பிக்கையுண்டு. அவர்கள் சாத்வீக மெய்ப்பொருள் ஆராய்ச்சியாளர்கள். உலக நிகழ்ச்சிகட்குத் தங்கள் கருத்தைச் செலுத்தினர். அவர்கள் துறவிகளல்லர். அவர்கள் அறிவுடைய மக்கள். தமக்காகவும், தம் மனைவி மக்களுக்காகவும், பிறருக்காகவும் அவர்கள் உழைத்தனர்.

யாவற்றிற்கும் — நாமறிந்தவைகட்கும், நம்மிடமிருப்பவைகட்காகவும் நாம் என்றுமே இம்மக்களுக்குக் கடமைப்பட்டவர்களாவோம். அவர்கள் நாகரீகத்தின் உற்பத்தியாளர்கள். விடுதலை பெற்று சம ஸ்தானங்களுக்கு அடிகோலியவர்கள். உரிமைக்காக உழைத்த வீரர்கள். தெய்வீகத்தை ஒழித்தவர்கள். முன்னேற்றத்தின் பெரும் தளபதிகளாகும்.

நன்றிக்குரியோர்!

யாருக்கு நன்றி கூறுவது? பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவிலே (இங்கர்சால் வாழ்ந்து வழங்கிய இப்பேருரை பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பதைக் கவனம் கூர்க) இருந்து கொண்டு, எல்லாவற்றினும் சிறந்த சிந்தனையிலே- அறிஞர்களின் அதிசய நிறைவிலே- பெரும் புரட்சிக் கொடியின்கீழே- மனிதன் சரித்திரத்தைசிறிதாகிலும் அறிந்து கொண்டுள்ள இந்நேரத்திலே-நன்றி கூறுவதற்காக அமைக்கப்பட்ட இந்நாளிலே, நான் மிக்க மகிழ்வோடு இறந்த காலத்து ஆண், பெண் அனைவருக்கும் காட்டுமிராண்டி காலத்து இரக்கமுள்ள தந்தையர்கட்கும், அன்பான தாய்மார்கட்கும் நன்றி கூறுகிறேன். முதன் முதலிலே நேர்மையான சொல்லைப் பேசிய தந்தைக்கும்; முதலிலே குழவியைக் கண்டு புன்னகைபூத்த தாயுக்கும் நண்பனுக்கும் நன்றிகூறுகிறேன். வேட்டையாடியும், மீன் பிடித்தும் அவர்களும், அவர்கள் குழவிகளும் வாழ வழி செய்த காட்டுமிராண்டிகட்கு நன்றி கூறுகிறேன். நிலத்தை உழுதவர்கட்கு-காட்டை திருத்தியவர்கட்கு-முரடான வீட்டைக்கட்டி, அதிலே நெருப்பின் சுடரருகே ஒளிர்ந்த அவர்கள் குழந்தைகளின் முகங்களைக் கண்டு மகிழ்ந்தவர்கட்கு—குதிரை ஆடு, மாடுகளைக்கொண்டுபிழைப்பு நடத்தியவர்கட்கு—இராட்டையையும், தறியையும் கண்டுபிடித்து, எப்படி நூற்பது—நெய்வது என்பதைப் போதித்தவர்கட்கு—உழவால் கோரைப்புல்லை கோதுமைப் பயிராக-நெற்பயிராக மாற்றியவர்கட்கு—கசப்பானவற்றை இனிய பழமாக்கி, முட்செடிகளை மலராக மாற்றி, நம் முள்ளங்களிலே கலையின் விதையைத் தூவியவர்கட்கு நான் நன்றி கூறுகிறேன். ஆதி கவிகட்கு,— பழைய கதைகளைக் கூறியவர்கட்கு- சுரம் வகுத்தவர்கட்கு-இன்பமும், துன்பமுமாகப் பாடுபவர்கட்கு— நம்பிக்கையாகவும் —காதலாகவும் பாடுபவர்கட்கு நான் நன்றி கூறுகி[illegible]

அதிலே மனிதனின் முக ஒளி நிழலை அமைத்துக் கொடுத்த சிற்பிகட்கு நன்றி கூறுகிறேன். மூளையைப் பயன்படுத்தி மெய்ப் பொருளைப்பற்றி பெரும் ஆராய்ச்சியை யாங்ஙன் செய்தல் வேண்டும் எனப் போதித்த தத்துவவாதிகளுக்கு—சிந்தனையாளருக்கு நான் நன்றி கூறுகிறேன். மோட்ச உலகைத் தகர்த்தெறிந்து, தாரகைகளின் இரகசியத்தைக் கூறி, பெருமைமிக்க பிரபஞ்சத்தை அறிவித்த வான ஆராய்ச்சியாளருக்கு—திருந்தா பொருள்களினின்று கதைகள் கண்டுபிடித்த; பழைய மலைகளிலே வைக்கப்பட்டிருந்த செய்திகளை; அலை, பனி, நெருப்பு இவைகளால் கிழிக்கப்பட்ட கோடுகளைக் கண்டுபிடித்துக் கூறிய பூதத்துவ ஆராய்ச்சியாளருக்கு—தசை, குருதி, குழாய், எலும்பு முதலியவைகளை உயிர் வாழ்க்கையின் பயனுக்காக ஆராய்ந்த உடற்கூறு வல்லுனர்க்கு-இயற்கையின் செய்கையோடு போட்டியிட்டு, இயற்கையின் கலையை உணர்த்துவதற்கு உழைக்கும் இயற்கை ஆராய்ச்சியாளருக்கு—விஞ்ஞானம் என்ற கையை வலிவு என்ற புருவத்தில் வைத்து அதிசயங்களைத் தொடுதலினாலே உண்டாக்கிய மருத்துவர்கட்கு—இயற்கை அழிப்பதற்காக முற்பட்டவர்களின் உயிரை இயற்கையின் எதிராக நின்று, கிண்டி, தைத்து உயிரைக் காப்பாற்றும் வைத்தியர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

மயக்க மருந்தும், பொருமி எழும் மருந்தும் கொண்டு கந்தர்வராக இருந்து உறக்கம் எழுப்பி, துடிக்கும் மூளையைக் கனவு என்னும் மென்மையான கயிற்றால் மூடிவிடுகின்ற சிறந்த சாதனத்தைக் கண்டுபிடித்தோர்க்கு நன்றி கூறுகிறேன். பிரயாண வண்டிகளும், அச்சகங்களும் ஏற்படுத்தி, அதன் பலனாய் பெரும் சிந்தனைகளும், மடியா மெய்ப் பொருள்களைக் கண்டும்; இயந்திரங்கள், பெருங் கப்பல்கள், புகைத் தொடர் வண்டிகள், கம்பிகள், தந்திகள், முதலியன கண்டுபிடித்தவர்கட்கு நான் நன்றி கூறுகிறேன். இரும்பிலும், எஃகிலும், கல்லிலும், கட்டையிலும் உழைக்கும் தொழிலாளிகட்கு —பெரும் இயந்திர வல்லுனர்கட்கு நன்றி கூறுகிறேன். எண்ணிலாப் பயனுள்ள பொருட்களும், சிறந்த பெருவாழ்வு வாழ வழிகோலி, அதனை நடைமுறையில் அமைத்தவர்கட்கு நன்றி கூறுகிறேன்.

இயந்திரத் தொழிலாளிகட்கும், அன்புமயமான தாய்மார்களுக்கும் பயனுள்ள பெண்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன். அவர்கள் தாம் நம்மினத்தின் பயனுள்ளோராவர்.

குண்டூசியைக் கண்டுபிடித்தவன், எல்லா சமயங்களிலும் வாழ்ந்த போப்பாண்டவர்கள், குருமார்கள் பிஷப்புகள், பாதிரிகள்—எல்லா மடாதிபதிகள், நம்பிக்கையுடையோர், துறவிகள், தத்துவவாதிகள் முதலிய யாவரினும் ஆயிரம் தடவை சிறந்தவனாவான்.

எல்லா மக்களின் ஆரம்பவாணர்களைக் காட்டினும், எல்லாக் கொள்கையை ஏற்படுத்தியவர்களைக் காட்டினும், எல்லாக் கேடும் சூழ் எண்ணக் குருமார்களைக் காட்டினும், சுயநலத் துறவிகளைக் காட்டினும் தீப்பெட்டி கண்டுபிடித்தவன் மக்களினத்துக்குப் பயனும், வசதியும் செய்தவனாவன்.

உண்மையான எண்ணத்தைக் கூறி, தங்களுக்குள்ளும் உண்மையாக இருந்து, தம் உள்ளங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்ட, நேர்மையான ஆண், பெண் அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

கிரேக்க, உரோம, சேனோ, எபிகுரஸ், சிசரோ, உலுக்ரடியஸ் முதலிய நாட்டுச் சிந்தனையாளரனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன். வீரமிக்க புருனோவுக்கும், மென்மைமிக்க (இ)ஸ்பினோசாவுக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

மனித மூளையிலே சிந்தனை ஒளிச்சுடரைப் புகுத்திய, தெய்வீகக் கோட்டையின் கதவைமூடி, பலகோடி துணைத் தோழர்கட்கு உரிமை பெற்றுக் கொடுத்த வால்டைருக்கு நன்றி கூறுகிறேன். வால்டைர் எனக் கூறும் போதே ஒளி சிந்தும் பெயராகத் திகழ்கிறது. தெய்வீக இருளின் தாபத்தைத் தீர்க்கமுடியாததோர் நட்சத்திரம் வால்டைர்.

பெரும் கவிகட்கும் நாடகாசிரியர்கட்கும், நான் நன்றி கூறுகிறேன். ஹோமருக்கும், அயேஸ்ச்சிலஸுக்கும் அவர்கட்கும் மேலாக ஷேக்ஸ்பியருக்கும் நான் நன்றி கூறுகிறேன். இதயந் துடிப்பைப் பாடலாக மாற்றி, பண் நிறைந்த பாடலமைத்த பர்ன்ஸுக்கு நன்றி கூறுகிறேன். 'ஸ்கைலார்க்' எழுதிய ஷெல்லிக்கு 'கிரிசியன் அர்ன்' எழுதிய பிரியானுக்கு, நான் நன்றி கூறுகிறேன். சிறந்த சிற்பிகட்கு நான் நன்றி கூறுகிறேன். 'வீனஸ்-டி-மிலோ' என்ற சிற்பத்தை (அமெரிக்க சிற்பம்) செதுக்கிய—தெரியாத சிற்பிக்கு நன்றி கூறுகிறேன். சிறந்த ஓவியர்கட்கு நன்றி கூறுகிறேன். இரம்பிராண்ட், காரட், என்போருக்கு நன்றி கூறுகிறேன். அழகுபடுத்தியவர்கட்கு — செல்வந்தர்களாக ஆக்கியவர்கட்கு—சிறந்த—பயனுள்ள — வீரமிக்க—கலை எண்ணங்கள் உண்டாகிய அனைவர்கட்கும் நன்றி கூறுகிறேன்.

(தொடரும்)

வாழ்க்கை ஒப்பந்தம்.

பட்டிவீரன்பட்டி தோழர் ஊ. பு. அ. ரெங்கசாமி அவர்களின் புதல்வன் திரு ரெ. நாகராஜன் அவர்களுக்கும், உசிலம்பட்டி தோழர் அண்ணாமலை அவர்களின் புதல்வி திருமதி லீலாவதி அம்மையாருக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் பட்டிவீரன்பட்டி தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அன்பிரதர் பங்களாவில் அமைத்திருந்த அலங்காரப் பந்தலில் 6-6-49 திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு மதுரை ஜில்லா திருமணப் பதிவு ஆபீசர் அவர்கள் முன்னிலையில் திருமணப் பதிவு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மதுரைத் தோழர் பி. டி. ராஜன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்களான மதுரை எம். துரைசாமி, உடுமலை முனிசிபல் சேர்மன் எம். எஸ். கங்கராஜன், விருதுநகர் தமிழ் தென்றல் ஆசிரியர் வி. வி. ராமசாமி, தோழியர் பத்மாவதி முதலியோர் மணமக்களைப் பாராட்டியும் பதிவுத் திருமணத்தின் சிறப்பைப்பற்றியும் பேசினார்கள். பட்டிவீரன்பட்டி கழகத் தோழர்கள் மணமக்களுக்கு வாழ்த்துமடல் வழங்கினார்கள். மாணவிகள் மணமக்களை வாழ்த்தி மலர் சொரிந்தனர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்களும் மணமக்களும் நன்றி கூறினார்கள். மணமக்களுக்கு நண்பர்கள் பலர் வாழ்த்துச்

பார்ப்பனர்களே

ஜாதிக்கொடுமையைப் பாரீர்!

சேலத்தைச் சேர்ந்த பிள்ளைகளத்தூர் என்ற ஊரில் ஒரு தாழ்த்தப்பட்ட தோழனை, அவ்வூரிலுள்ள உயர்ஜாதி இந்துக்கள் என்கிற வெறிபிடித்த சில மூர்க்கர்கள், ஜாதிவெறி காரணமாகத் தாக்கிக் கொலைசெய்து விட்டுத் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகக் காட்டினார்களாம்.

பல நாளைக்குப் பிறகு மீண்டும் பிணம் தோண்டி எடுக்கப்பட்டு, இப்போது பரிசோதனைக்குப் போயிருப்பதோடு, வெறியர்கள் எட்டுப்பேர் மீது இந்த மாதம் 4-ந் தேதி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம்.

இந்த வெறியுணர்ச்சி உங்கள் திருவிளையாடல் அல்லவா?

மூடநம்பிக்கையின் பலன்.

ஆத்தூரில் தோழர் ராசு என்பவர் வீட்டில் புதையல் எடுத்துத் தருவதாகச் சொல்லி ஏமாற்றுத் திருட்டு வேலை செய்தான் ஒரு பேர் வழி.

சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டிய செவ்வாய்க்கிழமைப் பூசைக்கு, ஒரு தங்கச்சங்கிலி தேவை என்று பூசாரி சொல்ல, மூடநம்பிக்கையால் பேராசையில் சிக்கிய தோழர் வாங்கிக் கொடுத்தாராம். பின்பு அவர் சாம்பிராணி கற்பூரம் வாங்கப் பயபக்தியோடு வெளியிலும் போய் விட்டாராம். அந்த நேரத்தில் என்னென்னமோ பித்தலாட்டங்கள் செய்து, வீட்டிலுள்ளவர்களை ஏமாற்றிச் சங்கிலியை மாற்றி விட்டான் பக்காப் பேர் வழி.

ராசு வந்தபின், மறுநாள் வரை தான் சங்கிலி வைத்திருக்கும் பெட்டியைத் திறந்து பார்க்கக் கூடாது, திறந்தால் பலனேற்படாது, (பேராசைப் பேர்வழி) யாரிடமும் பேசக்கூடாது, மறுநாள் பூசையில் அற்புதங்களைக் காண முடியும் என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டானாம், விபூதிச் சாமியார் தம்பியாகிய மந்திரச் சாமியார்.

மறுநாள் பார்த்தால் ஆளில்லை. பெட்டியைத் திறந்தால் பித்தளை சங்கிலி. ஆசாமியின் ஊர், பெயரை அவர் அறியாராம்.

இந்த எத்தர்களுக்கு ஊர் பெயர் எப்படித் தெரிய முடியும்? இவர்கள் பேச்சை நம்பி ஏமாறுகிற சோணகிரிகள் உள்ளவரை, இவர்கள் பாடு கூத்தும் கும்மாளமும் தானே.

செய்தி அனுப்பியிருந்தனர். இம் மண நிகழ்ச்சிக்கு வந்திருந்த உள்ளூர் வெளியூர் பிரமுகர்களுக்கு சிற்றுண்டி, சந்தன தாம்பூலம் மலர் வழங்கப்பட்டது. மண நிகழ்ச்சி மாலை 5-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

சீர்திருத்தத் திருமணம்.

அல்லோயா தோட்டம். மே. 25.

நேற்றிரவு 7—50 மணிக்கு தோழர்களான சண்முகம்—சரோஜா வாழ்க்கை ஒப்பந்தம் மணமகள் இல்லத்தில் தோழர் பிரம்மன் (வெள்ளவத்தை திராவிடர் கழகத் தலைவர்) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தோழர்களான ஏ. ஏ. சுப்பையா, முத்தையா, அழகையா ஆகியவர்களால் சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றிப் பேசப்பட்டது.

தம்பதிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு நன்றி கூறுதலுடன் விழா இனிது முடிவுற்றது.

எமது தீர்ப்பு

திராவிட நாடு

(முதல் பாகம்)
ஆசிரியர்:
அ. கு. பாலசுந்தரனார் பி.ஏ. எல்.டி.
பக்கம் 250. விலை ரூ. 2—0—0.

"திராவிடநாடு தனியாகப் பிரிந்தால் வாழ்ந்து விடுமா?" இது நம்மை நோக்கிச் சிலர் கேட்கும் கேள்வி. இந்தக் கேள்விக்கே இடமில்லை என்பதை இந்நூலைப் படித்தால் நன்கு புரியும். திராவிட நாட்டில் உள்ள வளப்பங்களின் பெருக்கைப்பற்றியும், அது சரியாகப் பயன்படுத்தப்பட்டால் இந்த நாடு எவ்வளவு சீரும் சிறப்புமாக விளங்க முடியும் என்பதையும் சரியான புள்ளி விபரங்களோடு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நூலைப் படிக்கின்ற எவரும் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை—முக்கியத்தை உணர்ந்து கொள்ள முடியும். இது ஒவ்வொரு திராவிடரின் கையிலும் இன்றியமையாது இருக்கவேண்டிய நூல்.

இந்த அரிய ஆராய்ச்சி நூலை திராவிடர்களுக்கு எழுதி உதவிய ஆசிரியரைப்பாராட்டுவதோடு, இதன் மறுபாகங்களையும் விரைவில் உதவவேண்டுமென ஆசிரியரைக் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:—இந்தப் புத்தகம் ஆசிரியரிடத்திலும், சென்னை விடுதலை நிலையத்திலும், ஈரோடு குடி அரசு நிலையத்திலும் விற்பனைக்குக்கிடைக்கும். வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

குழந்தைகள் இலக்கியம்.

(கவிஞர் தமிழண்ணல்)
விலை அணா ஆறு.
உண்மைப் பிரசுரம் வெளியீடு
தேவகோட்டை.

இது குழந்தைகள் இலக்கியம் என்றாலும் பெற்றோர்களும் மற்றோர்களும் குழந்தைகளுக்குப் பாடல்களைப் பாடிக்காட்டிப் பண்படுத்தவேண்டும் என்னும் கருத்தோடு எழுதப்பட்டிருப்பதேயாகும்.

கவிஞரின் தமிழ்ப் பற்றும், கற்பனையுள்ளமும், இளம்உள்ளங்களோடு தோய்ந்து எழுந்த சொற்களும் பாடல்களை இனிமைப்படுத்துகின்றன. இத்தகைய இலக்கியங்கள் நாட்டிற்கு அதிகமாகத் தேவை.

கொதிக்கும் இரத்தம்.

(அ. வெ. ரமணி)
விலை அணா எட்டு.
இயற்கை வெளியீடு
திருநாகேஸ்வரம், கும்பகோணம்.

பார்ப்பனீயம், தொழில்முறை, பெண்ணுரிமை, ஆட்சிமுறை, மதவாழ்வு ஆகிய அய்ந்து பெருந்தலைப்புகளில் ஆசிரியர் உணர்ச்சியில் தோன்றிய சொற்களால் சொரிந்திருக்கின்றார்.

கவனிக்க

புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புவோர், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. 3-ரூபாய்க்கு உட்பட்ட ஆர்டராயிருந்தால், ஆர்டருக்குரிய முழுத் தொகையையும் செலவுத் தொகையையும் முதலிலேயே அனுப்பி விடவேண்டும். 3-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டராயிருந்தால், நாலில் ஒரு பங்காவது முன்னால் அனுப்பிவிட வேண்டும். இப்படி முன்பணம் அனுப்பாத ஆர்டர்கள் நிச்சயமாகக் கவனிக்கப்பட மாட்டாது.

மானேஜர், குடி அரசு, ஈரோடு

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியமாயிருக்கின்றது என்றாலும் மக்கள் எதை எதை மேற்கண்ட மாதிரி குணங்கள் என்று கருதுகின்றார்களோ அதைச் செய்யாமல் இருக்க இந்த எண்ணத்தையும் நம்பிக்கையும் உண்டாக்குவதாலோ, நிலைநிறுத்துவதாலோ முடிகின்றதா? என்பதுதான் இங்கு யோசிக்கத் தக்கதாகும்.

இது ஒருபுறமிருக்க, மேற்கண்ட—அதாவது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என்பது இல்லை என்றும், அல்லது இருக்க முடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்திலாவது, அந்தப்படி கருதிக்கொண்டிருக்கின்றார்கள் என்று பிறரால் கருதப்படுகின்றவர்களிடத்திலாவது, முன் சொல்லப்பட்ட திருடு, பொய், வஞ்சகம், பிறரை இம்சிப்பது முதலிய குணங்கள், கடவுள் நம்பிக்கைக்காரர்களைவிட (ஆஸ்தீகர்களைவிட) அதிகமாய் இருப்பதாகவாவது அல்லது பிறமக்களுக்கு ஆஸ்தீகர்களைப் போன்ற நன்மை செய்யவில்லை என்றாவது சொல்லமுடியுமா என்று பார்த்தால், அதுவும் முடியாத காரியமாய்த்தான் காணப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சி முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில், மேற்கண்டவிதமான காரியங்களைப்பற்றி யெல்லாம் யோசனை செய்து பார்ப்பதை விட்டு விட்டு, தனக்கே புரியாதபடி ஒன்றை நினைத்துக்கொண்டு "கடவுள் உண்டா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுளை ஒப்புக்கொள்ளுகின்றாயா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் ஏன் வித்தியாசமாயிருக்கவேண்டும்?"

"ஒருவர், பணக்காரனாகவும் ஒருவர் ஏழையாகவும் ஏன் இருக்கவேண்டும்?"

"ஒருவன், கூன், குருடு, நொண்டி, குஷ்டரோகி முதலியவனாயும் ஒருவன் நல்ல திடசரீரியாகவும் ஏன் இருக்கவேண்டும்?"

"ஒருவனுக்கு ஏன் பத்துப்பிள்ளை, ஒருவனுக்கு ஏன் நாலுபிள்ளை, ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?" என்றும்,

"இருவர் ஒரேகாலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால் ஒருவர் நஷ்டமும், ஒருவர் லாபமும் ஏன் அடையவேண்டும்?" என்பது போன்ற கேள்விகள் கேட்டு, அதன் மூலம் மேற்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டு என்று மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம்மாதிரி கேள்விக்காரர்களைப் பகுத்தறிவு இல்லாதவர்கள், ஆராய்ச்சிச் சக்தி இல்லாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இப்படிப்பட்ட கேள்வி கேட்பவர்களை ஒரே ஒரு பதிலில் வாயடைக்கவேண்டுமானால், "இம்மாதிரியாகத் தோற்றங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் காணப்படுவதாலேயே (மேற்கண்ட குணமுடைய) கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில் சர்வ சக்தியுடைய கடவுள் ஒருவர் இருந்து, சர்வத்திலும் புகுந்து, சர்வத்தையும் ஒன்று போலப் பார்ப்பவராயிருந்தால், சர்வத்தையும் ஒன்று போலவே சிருஷ்டித்திருக்கலாமன்றோ? வேறு வேறாகக்காணப்படுவதாலேயே சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்பதுதான் பதிலாகும்.

ஏனெனில், நொண்டிக்கும், மூடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப்படுபவனுக்கும், கஷ்டப்படுத்துகிறவனுக்கும் "கடவுளே" காரணஸ்தனாயிருந்தால், கடவுளைச் சர்வதயாபரத்துவமுடையவனென்றும், பாரபட்சமில்லாதசர்வ சமத்துவ குணமுடையவனென்றும், எப்படிச்சொல்லமுடியும்? இந்தப்படி பகுத்தறிவைக்கொண்டு சொல்லக்கூடிய சமாதானங்கள் ஒரு புறமிருக்க, ஆராய்ச்சியைக் கொண்டு அறியக்கூடியசமாதானங்களைப்பற்றி சற்று கவனிப்போம்.

ஒரே கையால் கைநிறைய அரிசியை அள்ளி அள்ளி வேறாய் வைத்து, ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித்தனியாய் எண்ணிப் பார்த்தால், அவற்றுள் ஒன்றுக்கொன்று எண்ணிக்கை வித்தியாசமிருப்பானேன்? அதே மனிதன் அதே கையால் அதே நிமிஷத்தில் அதே குவியலிலிருந்து அள்ளினவைகள் ஏன் வித்தியாசப்படுகின்றது? ஒரே பூமியில் ஒரே வினாடியில் விதைக்கும் ஒரே மாதிரி விதைகள், சில முளைத்தும் சில முளைக்காமலும், முளைத்தவைகளில் சில வளராமல் கூளையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிகமான மணிகள் கொண்ட கதிராகவும் சில குறைவான மணிகள் (தானியங்கள்) கொண்ட கதிராகவும், சில முளைத்து நன்றாய்த் தழைத்தும் ஒரு மணிகூட இல்லாத வெறும் கதிராகவும் இருக்கக் காரணம் என்ன? ஒரு வினாடியில் ஒரு பூமியில் நட்ட செடிகள் ஒன்று பல கிளைகளுடனும், ஒன்று சுவல்ப கிளைகளுடனும் வளருவதும், ஒன்று பதினாயிரக் கணக்காகக் காய்ப்பதும், ஒன்று நூற்றுக்கணக்காய்க் காய்ப்பதும், ஒன்று பூ விட்டு எல்லாம் கருகி உதிர்ந்து விடுவதும், ஒன்று பூவிடாமலும் பிஞ்சு விடாமலும் வறடாயிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அதனதன் இனத்தில் ஏன் ஒன்றுபோல் இருக்கக்கூடாது?

ஒரு சமயம் கடவுளே இந்தப்படி செய்திருப்பார் என்று சொல்வதானால் அம்மரம், செடி, தானியம் முதலியவைகள் இப்படி பலன் அடைவதற்குக் காரணம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு என்ன சமாதானமோ அதுதான் மனிதர்கள் சம்மந்தமான கேள்விகளுக்கும் சமாதானம் என்பது தானாகவே புலப்படும்.

முடிவுரை.

கடவுள், மதம் ஆத்மா, நான், பாவ-புண்ணியம், மோட்ச-நரகம், ஒழுக்கம், என்பனவெல்லாம் மனிதனால் கற்பனை செய்யப்பட்ட ஓர் கட்டுக் கதையே யொழிய வேறல்ல. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒரு சில சுயநலக் கூட்டத்தார்—ஊரார் உழைப்பில் உடல் நோவாது உண்டு வாழ வேண்டுமென்று விரும்பும் மனிதப் புல்லுருவிகள்-புரோகிதர்கள் இந்

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மலர் மணம்!

"தேர்தலிலே ஓட்டளியுங்கள்...... தேனாறு ஓடும் என்று கூறினீர்களே! எங்கே அய்யா தேனாறு ஓடுகிறது. தேனாறு ஓடாவிட்டாலும் போகிறது, வாழ்க்கைப்பாதை தேய் பிறை ஆகாமலிருந்தால் போதுமே!"

இதுபோல மக்கள் ஆட்சியாளரைப் பார்த்து, உரத்த குரலிலேயில்லாவிட்டாலும்—மெல்லிய குரலிலேயாவது கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

மேடைப் பேச்சாளன் மெல்லிய குரலிலே பேசினாலும், அவனுடைய குரலை அருகிலுள்ள ஒலிபெருக்கி... பெரிதாக்கிக் காட்டுவதைப்போல,... மக்கள் கேட்க அஞ்சி மெல்லிய குரலில் கேட்பதை, மக்கள் அருகிலிருந்து மக்களுக்காகத் தொண்டாற்றிடும் திராவிடர் கழகம் உரத்த குரலிலே கேட்கிறது.

மக்கள் கேட்டிடும்போது, "இப்போதுதானே ஆட்சி முறையை ஏற்றுள்ளோம், இதற்குள் சூது செய்யவில்லையே......இது செய்யவில்லையை என்று எங்கள் மீது காய்ந்து கொள்வதில் என்ன லாபம்! நம் வீட்டுக்கு வரும் புதுமணப் பெண், வந்த அன்றைக்கே எல்லா வேலைகளையும் சரியாகவா செய்து முடித்துவிடுகிறாள்! நாளாக ஆகத்தானே குறையின்றிச் செய்யக் கற்றுக் கொள்கிறாள்"....என்று ஆட்சியாளர் மக்களிடம் கூறிவிடுகின்றனர்.

மக்களிடம் இவ்வளவு சாந்த குணத்தில் பதிலளித்த ஆட்சியாளர்......திராவிடர் கழகத்தாராகிய நாம், மக்கள் கேட்ட அதே கேள்வியையே கேட்கும்போது...ஓங்கார சொரூபமெடுத்து; "திராவிடர் கழகத்தார்தானே...நீங்கள். நீங்களோ எங்கள் கட்சி...அல்லாத மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆளும் கட்சியிலுள்ள எங்கள்... மீது ஏதாவது குற்றம் சுமத்தி எங்களை ஒழிக்கத்தானே வழிதேடுவீர்கள்."...என்று தங்கள் பிரச்சார சாதனங்களின் துணை கொண்டு, நாம் கேட்ட கேள்வி அவர்களின் கேலிச் சிரிப்புக்குள் மறையும்படி செய்துவிடுகின்றனர்.

* *

குயிலைப் பழிக்கும் குரலைக் கொண்ட குமரி, கோபாவேசத்தோடு பேசும்போதுகூட, அந்தக் கோபத்திற்கு இலக்காவோர்க்கு ஒரு குதூகலம் ஏற்படும்!

மக்கள் குயிலைப் பழிக்கும் குமரியின் குரலிலேயே ஆட்சியாளரிடம் முறையிடுகின்றனர். ஆகவேதான் ஆட்சியாளர் அலட்சியப் புன்னகையுடன் மக்களிடம் பதிலளித்துவிட்டு, கடுகடுத்த குரலில் முறையிடும் நம்மைப் பார்த்துச் சிடுசிடுக்கின்றனர்.

"கண்ணே! உற்றாரின் பேச்சுக்கும், ஊராரின் ஏசலுக்கும் செவி சாய்க்கேன்! நீ என் உயிர், உன்னைப் பிரிந்து உயிர் வாழேன்"...என்று, கணவனையிழந்த காரிகையிடம் காதல் மொழிபேசி, தான் ஒரு சீர்திருத்தவாதி போன்று நடித்திடும் வாலிபனைப் போல.........;

"என் பொன்னாடே; ஓரிரு நூற்றாண்டுகள்வரை கொடுங்கோலனிடம் சிக்கிச் சீரழிந்து, இப்போது இந்த விதவைக் கோலத்துடன் காட்சியளிக்கிறாய்...இருந்தாலும் என்ன! உன்னை நான் வாழவைக்கிறேன்" எனக் கூறி அன்னிய ஏகாதிபத்தியம் தன் ஆதிக்கத்தை விட்டுச் சென்ற இத்துணைக் கண்டத்தைக் காங்கரஸ் கட்சியினர் ஏற்று நடத்த முன்வந்தனர்.

ஒரு வருடமும் ஓடி மறைந்தது.

* *

"கண்ணாளா!"

"என்ன கண்ணே!"

"என்னைத் திருமணம் செய்து, வாழ்க்கைப் பூங்காவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினீர்களே! ஒரு வருடம் ஓடி மறைந்து சென்றுவிட்டதே; எப்பொழுது நீங்கள் அந்தப் பூங்காவுக்கு அழைத்துச் செல்லப் போகிறீர்கள்"

"கண்ணே! என் வீட்டின் பொருள்களை என் உடன் பிறந்தோர்கள் பங்கிட்டுக் கொண்டனர். கைம் பெண்ணாகிய உன்னை நான் மணக்கும் காரணத்தால்......எனக்குரிய பங்கைக் கொடுக்க அவர்கள் மறுக்கிறார்கள்! வாழ்க்கைப் பூங்காவுக்குச் செல்லு முன்னர் அதன் வழிச் செலவுக்கு ஏதாவது பொருள் தேடிக் கொள்ள வேண்டாமா?"

"பொருள் வேண்டுவது அவசியந்தான் என்றாலும், உமக்குரிய பொருள் உமது சோதரர்களால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டிருக்கும்போது...அதை அவர்களிடமிருந்து திருப்பிப் பெற உமக்குத் திறமையில்லையா!"

"என்ன செய்வது கண்ணே! அவர்கள் முரடர்கள்."

"அவர்கள் முரடர்கள் என்பதற்காக நாமும் முட்டாள்தனமாக நடந்து கொள்ளவேண்டுமா. நாம் இப்படியே எத்தனை நாளைக்குத்தான் மறைமுகமாகக் காதல் நாடகம் நடத்துவது!......பெண்ணைப் போகக் கருவியாக எண்ணி இன்பம் அனுபவிக்க வந்த உம்மையும் ஒரு உத்தமர் என நம்பினேனே...நட்டாற்றில் கைவிட்டு விட்டாயே!"

* *

இதுபோன்று வருடம் ஒன்று ஆகியும், பாசமொழி பேசித் தன்னை மோசம் செய்துகொண்டிருக்கிறான் என்பதைக் கண்டுகொண்ட கைம் பெண், சீர்திருத்த வாலிபன் போன்று நடித்தவனை.....கோபாவேசத்தோடு பேசுவதைப்போல......

"ஆட்சியாளரே!"

"என்ன! எதற்காக அழைத்தீர்!"

"எம்மைக் கொடுங்கோலரிடமிருந்து மீட்டுவந்தீர், உண்மைதான்! மீட்ட சில நாட்களில், சுவர்க்க பூமி அருகில் எங்களை உலவவைக்கிறேன் என்று கூறினீர்களே! இப்பொழுதே

தகைய கற்பனைகளைச் செய்து மக்களை மூடர்களாக்கி-அறிவிற்குப் பகைவர்களாக்கி-தன் நம்பிக்கையையிழக்கும்படி செய்து-இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தை மக்கள் வெறுக்கும்படி தூண்டி, தாங்கள் இவ்வுலக வாழ்க்கையில் பூரண இன்பந்துய்த்துக்கொண்டு, மற்ற மக்களுக்கு மறு உலக வாழ்க்கையில் மோகங்கொள்ளும்படி செய்து விட்டனர். எனவே பகுத்தறிவு வாதிகள்-மனித ஜீவ அபிமானிகள் தங்கள் பகுத்தறிவினால் சுயநலப் புரோகிதர்களால் கட்டப்பட்ட இந்த மறு உலக நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து, மக்களை இவ்வுலக வாழ்க்கையில் பற்றுள்ளவர்களாகச் செய்யவேண்டும். விஞ்ஞான அறிவு நாளடைவில் லோகாயத வாதிகளுக்கு (Materialist) அனுகூலமாக வளர்ந்து கொண்டே வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி என்னும் சம்மட்டியினால் கடவுள், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் என்னும் கற்பனைகள் நீர்த்தூளி செய்யப்பட்டுக் கொண்டேதான் வருகிறது. ஆனாலும் நாம் ஒவ்வொருவரும் இவ்விஞ்ஞான முறையைக் கைக்கொண்டு சுயநலப்புரோகிதர்களால் நிறுவிய மறு உலக வாழ்க்கையின் நம்பிக்கையை விரைவில் உலகைவிட்டோட்டி, இவ்வுலக வாழ்க்கையை இன்பகரமாய்ச் செய்ய முயலுவோமாக.

வறுமை எங்கள் சடலத்தைத் தேய்த்துக்கொண்டிருக்கிறதே! எப்பொழுது நாங்கள் சுவர்க்க பூமி அருகில் உலவுவது!''

''நான் உங்களையெல்லாம் சுவர்க்க பூமி அருகில் உலவவைக்கலாம் என்று எண்ணித்தான், கொடுங்கோலனை ஓட்டிவிட்டு ஆட்சிப்பீடம் ஏறினேன். ஆனால்......சுவர்க்க பூமிக்கு அழைத்துச் செல்வதால் ஏற்படும் வழிச் செலவை...ஈடுகட்டும் அளவிற்குப் பொருள்கள் எம் வசம் இல்லையே! நம்மிடம் இருக்கவேண்டிய பொருள்களெல்லாம் பாங்கரிடமும்; பணமூட்டைகளிடமுமல்லவா பதுங்கி விட்டது!''

''என்ன ஆட்சியாளரே' சுவர்க்க பூமிக்கு அழைத்துச்செல்ல உமக்கு அவா உண்டு என்கிறீர்! அதே நேரத்தில் அதற்குரிய பொருளும் தேவை என்கிறீர்; அந்தத் தேவையான பொருளும் பணமூட்டைகளிடமும், பாங்கர்களிடமுமல்லவா பதுங்கிக் கிடக்கிறது என்பதும் தங்களுக்குத் தெரிகிறது! இவ்வளவு தெரிந்தும் தாங்கள் ஏன் நடைப்பிணம்போன்று உலவுகிறீர்! ஒரு சட்டம் செய்து பணமூட்டைகளிடமும்...பாங்கர்களிடமுமுள்ள பொருள்களை சர்க்கார் வசம் சேர்ப்பது தானே! இதுகூடச் செய்யத் திறமை இல்லை என்றால் ஆட்சி முறையை எதற்காக ஏற்று நடத்தவேண்டும்.''

...என்று, தன்னை ஆட்சியாளர் ஏமாற்றுகின்றனர் என்பதைக் கண்டு கொண்ட மக்கள், குயில் மொழியில் முறையிடுகின்றனர்.

* *

''என்னைக் கெடுத்துவிட்டாயே!'' என்ற கைம்பெண்ணின் கோபாவேசப் பேச்சைக் கேட்டு, சீர்திருத்த வாலிபன் போன்று நடித்தவன்...... சிரித்து நிற்பான். இதுபோலவே... 'வாழ்க்கை பாலைவனமாகிறதே' என்ற மக்களின் குரலைக் கேட்டு ஆட்சியாளர் ஆனந்தக் கண்ணீர் வடித்து நிற்கின்றனர்.

மணாளனை இழந்த மங்கையின் கோபாவேசப் பேச்சும்...மரணத்தைத் தழுவத் துடிக்கும் மக்களின் கோபாவேசப் பேச்சும், குயிலின் குரல்போன்றிருப்பதால்தான் அவர்களின் கோபத்துக்கு இலக்காவோர்க்கு குதூகலமேர்படுகிறது!

''அடபாதகா! நேற்றுவரை அவளுடன் கொஞ்சி இருந்தாயே, இன்று உற்றார் தூற்றுகிறார்கள் என்பதற்காக, பணத்தின்மேல் பாசங்கொண்டு அவளைக் கைவிட்டுஓடுகிறாயா! இதோ பார்...நான் உனக்குப் பக்கத் துணையிருக்கிறேன்...உற்றார் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு நான் பதிலளிக்கிறேன். நீ அவளைக் கைப்பிடித்து வாழ்க்கை நடத்து.''

...என்று இலட்சியவாதி ஒருவன், சீர்திருத்தவாதியாக நடித்து, கைம்பெண்ணிடம் இன்பத்தை அனுபவித்துவிட்டு...அவள் வாழ்வையும் பாழ்படுத்திவிட்டு ஓடும் நேரத்தில் புத்திமதி கூறுவதுபோல...;

''ஆளவேண்டுமென்றுதானே ஆட்சி முறையை ஏற்றீர்! ஆண்டு இரண்டுகூட ஆகவில்லையே, அதற்குள் ஆயாசப்பட்டு...பணமில்லையே என்ற பாசுரம் ஏன் பாடுகிறீர்! மக்களை இன்னல் கடலில் தள்ளிவிட்டு...ஆளவந்தார் என்ற போர்வைக்குள் நீங்கள்மட்டும் இன்பக் கடலில் நீந்துகின்றீரே! ஆட்சியை நடத்தமட்டும் போதிய பணமில்லை யென்கிறீர்...பணமூட்டைகளின் பணத்தைத்தொட்டால் அவர்கள் தூற்றுகின்றனர் என்றும் கூறுகின்றீர்! பணமூட்டைகளின் தூற்றுதலை நாங்கள் ஆட்சிப்பீடத்துக்குவெளியேநின்று பார்த்துக் கொள்ளுகிறோம்! நீங்கள் நல் ஆட்சி நடத்தத்தொடங்குங்கள்'' ......என்று திராவிடர் கழகத்தாராகிய நாம் ஆட்சியாளரைப் பார்த்துக் கூறுகிறோம்.

நடுநிசியிலே வீட்டின் பின் சுவர் ஏறிக்குதித்து விலையுயர்ந்த பொருள்களை அபகரித்துக்கொண்டுஓடுபவனை ......பாராக்காரன் வழிமறித்து, அவனைக் குறுக்குக் கேள்விகள் கேட்டு மடக்குவது போன்று...திராவிடர் கழகத்தாராகிய நாம்...ஆட்சியின் பெயரைக்கூறி...ஆட்சியாளர் அகப்பட்டதைச் சுற்றுவதைக் குறை கூறுவதால், ஆட்சியாளருக்கு...மக்கள் கேட்டிடும் போது ஏற்படக்கூடிய மகிழ்வு மொழி நாம் கேட்டிடும்போது ஏற்படுவதில்லை!

ஆகவேதான் சற்று ஆணவக்குரலிலேயே நம்மிடம் ஆர்ப்பரிக்கின்றனர். அதனால்தான் அவர்களுக்குத் துணைபுரியவரும் நம்மைத் துரோகி என்று எண்ணி விடுகின்றனர்.

நடுநிசியில் பொருள்களை அபகரித்துச் செல்பவன்...பொறுமை இழந்து பேசுகிறானே என்பதற்காகப் பாராக்காரன் பயந்து விடுவானா!

ஒரு வேளை பொருளை அபகரித்துச் செல்பவன் இறுதியிலே இறங்கி வந்து, ''ஐய்யா! ஏதோ தெரியாத்தனத்தால் அபகரித்து விட்டேன். இனி இம்மாதிரி தவறு நிகழாது; வேண்டுமானால் இந்தப் பொருளில் ஒரு பங்கை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்'' என்ற முறையிலே...கெஞ்சிக்கூத்தாடுவான்!

பல கட்சியினரும் இன்று அபகரித்த பொருளிலே பங்கு போட்டுக் கொண்டுதானிருக்கின்றனர்.

ஆனால்...

திராவிடர் கழகத்தான் பங்குபெறும் பாராக்காரன் அல்ல!

அவன் உண்மை உழைப்பாளி. உதிரத்தைக் கொட்டியேனும், உரிமையைக் காப்பாற்றுவானேயன்றி ஊரார் பொருளுக்கு ஆசைப்படான்.

இந்த உள்ளம் திராவிடனுக்கு இருப்பதால்தான் ஆட்சியாளர் வீசும் வேல்களைத் தன் திடந்தோள்களால் தேக்கிக்கொண்டே, மக்களுக்குப் புது வாழ்வு ஏற்படப் பணியாற்றுகின்றான்.

* *

பாராளுமன்றம் ஒரு பாழுங்குகை; அதில் மன்ற உறுப்பினரின் விவாதம் ஒரு விளக்கு! பாட்டாளிகளுக்கு மன்ற உறுப்பினர்கள் என்ன விவாதம் புரிகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இருப்பதில்லை. ஆகவே பாழுங்குகையில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் எப்படி அறிந்து கொள்ள முடியும்? என்ற காரணம் கொண்டேதான்...திராவிடர் கழகத்தார்......பாராளுமன்றம் மக்களின் உள்ள முரசமாகவேண்டுமென்று கூறுகின்றனர்.

இப்படி திராவிடர் கழகத்தார் ஆட்சி முறையைப்பற்றிக் கூறுவதாலேயே, ''திராவிடர் கழகத்தார் பதவி மேல் மோகங்கொண்டு விட்டனர், ஆகவேதான் நம் ஆட்சியைக் குற்றஞ்சாட்டிப் பேசுகின்றனர்; வேண்டுமானால் அவர்கள் ஆட்சிமுறையை ஏற்று நடத்துவதுதானே!'' என்று பேசுவதானது- பேசுவோர் அதைத் திறமையான சவால் என்று கருதிக்கொண்டிருக்கலாமே ஒழிய, அதில் அடங்கிய அறியாமை எவ்வளவு என்பதைக் கருதியிருக்கமுடியாது.

திராவிடர்கள் இன்றைய அரசியல் கொந்தளிப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.'

அவர்களுடன் இன்றைய ஆட்சியாளர் போட்டி போட நினைப்பது பேதைமை!

இவ்வளவு நாம் கூறிவிட்டால் ஆட்சியாளருக்கு மனம் குளிர்ந்து விடுகிறது. ஆனால் அடுத்த நிமிடமே, ''அரசியலில்தான் போட்டி போடவில்லை என்று கூறிவிட்டீர்களே! பின் ஏன் நாங்கள் செய்யும் காரியங்களில் சோடை கண்டுபிடித்து வசை புராணம் தொடுக்கிறீர்கள்'' எனக் கேட்கின்றனர்.

குற்றமிருந்தால் திருத்திக் கொள்ளுங்கள் என்று கூறுவது, எங்கும் எப்பொழுதும் நடைபெறுகிற முறையான செயல்தானே! அதற்காக ஏன் ஒரு முறை அழுது ஓயவேண்டும்.

''மது ஒழிப்புச்செய்தாயே! கோர்ட்டிலே ஏன் கள்ளச்சாராயம் காய்ச்சிய குற்றவாளிகள் நித்தம்...நித்தம் காட்சியளிக்கின்றனர்! இது மது ஒழிப்புத் திட்டம் வெற்றி பெறுவதையா காட்டுகிறது?''

'கள்ள மார்க்கட்டில் பொருள்கள் விற்பனை செய்யக்கூடாது என்று

சட்டம் செய்தாயே! எத்தனை கள்ள மார்க்கட் குற்றங்கள், கள்ள மார்க்கட் ஒழிப்பு இலாக்காவினால் கண்டு பிடிக்கப்பட்டு, அந்தக் கள்ள மார்க்கட் ஆசாமி...காந்தி பக்தராய் இருக்கிறார், நம் மந்திரிகளுக்கு மிகவும் நெருங்கிய நண்பருங்கூட...என்ற காரணத்தைக் கொண்டு, குற்றம் எதும் சாட்டப்படாது, விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்!...இது எதைக்காட்டுகிறது, ஆட்சி ஆட்டங்கொடுக்கிறது என்பதைத்தானே!''

''இலஞ்சம் சர்க்கார் அலுவலகத்தாரிடமும் பரவுகிறதுஎன்பதை அறிந்து, இதைத் தடுக்க இலஞ்ச ஒழிப்புக் கமிட்டி அமைத்தாயே! அந்தக்கமிட்டி என்ன...ஆகியது?...இலஞ்ச ஒழிப்புக் கமிட்டியே இலஞ்சம் வாங்குகிறதே! சட்டம் தூங்குகிறது...பாதி தூக்கத்திலேயே அது விழித்து விடாதபடி, சர்க்கார் தாலாட்டுப்பாடுகிறது.''

* *

இதுபோன்ற பல குற்றச்சாட்டுகளை எடுத்துக்காட்டி திருத்திக்கொள்ளுங்கள் என்று கூறும் போதெல்லாம் சர்க்கார்நம்மீது பாய்கின்றனர்,...''உங்களுக்கும் அரசியலுக்குந்தான் வெகுதூரம்—ஆச்சே''...என்று!

தாம் எண்ணி வந்த காரியத்தை—நடைமுறையில் காட்ட இயலவில்லையே என்று ஆட்சியாளர் கலங்குகின்றனர்!

இந்தநேரத்தில் நாம் அவர்கள்மேல் குற்றச்சாட்டு செய்வதால்,...ஆத்திரமும் ஆவேசமும் முன்னைவிட அதிகரிக்கிறது.

* *

மக்களை வாழ்க்கைப்பூந் தோட்டத்திலே உலவவைக்கவேண்டுமென்றுதான், ஆட்சியாளர் கஷ்டப்பட்டு பூந்தோட்டம் அமைத்தனர். பூக்கள் பூத்திடும் நாளையும் எதிர்பார்த்தனர்!

அந்த நாளும் வந்தது...

பூக்கள் பூத்துக்குலுங்குவது கண்டு பூரித்தனர்!

மலர் பூத்தது என்னவோ உண்மைதான் அந்தப் பூத்தமலரில் மணமுண்டு!

மணமுண்டு ஆனால் ஆட்சியாளர் எதிர்பார்த்தபடி மகிழ்வு மணமல்ல அது! மயக்கமணம்!

இந்த நிலை வெளியார்க்குத் தெரியக்கூடாது என எண்ணி ஆட்சியாளர் மறைத்தனர்.

மறைத்து என்ன பயன்!

மறைபொருள் எப்பொழுதாவது அம்பலத்திற்கு வந்துதானே தீரும்!

ஆட்சியாளர் கட்சியைச் சேர்ந்த பிரபலஸ்தர் ஒருவர் அந்த மலரின் தன்மையைப் பற்றி கூறிவிட்டார்!

''லஞ்ச ஊழல்களைப்பற்றி காங்கரஸ்காரர்கள் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்தாலும்கூட, சர்க்கார் அவற்றில் போதுமான கவனம் செலுத்துவது கிடையாது.—சர்க்காருக்கு சங்கடம் நேரும்போதெல்லாம் அவர்கள் காந்தியாரின் உபதேச மொழிகளைப் பாராயணம் செய்கிறார்கள். ஆனால் அந்த உபதேச மொழிகளை அவர்கள் எல்லா வகைகளிலும் கைக்கொண்டு நடப்பது கிடையாது. காந்தியார் தமது குற்றத்தைத் தாமே ஒப்புக்கொண்டார். இதேபோல் சர்க்காரும் காந்தியார் உபதேசப்படி நடப்பார்களானால், சர்க்காரும் தாங்கள் செய்த தவறுகளை, சங்கடங்களை தாங்களே ஒப்புக்கொள்ளவேண்டும்.''

The administration was not paying adequate attention to cases of bribery brought before them by congressmen:— Whenever government were in difficulties they invoked Gandhian teachings but did not practise them in all respects. Gandhiji owned his faults. Likewise the government, if they followed gandhiji's teachings, should own their faults and difficulties.

...பூந்தோட்ட அமைப்பு முறையில் கோளாறு உள்ளது. அதைதிருத்தி அமையுங்கள் என்று கூறுவோரின் புத்திமதியையும் கேட்க மறுக்கின்றனர், என்று பூந்தோட்டம்அமைத்தவர் மீது குற்றஞ்சாட்டுகிறார் அதே குழுவைச்சார்ந்த பிரபலஸ்தர்!

மேலும் அவர் கூறுகிறார்!

''மேற்கு சமதர்மமுறை, காந்தீய முறை ஆகிய இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று அறிய முடியாது தவிப்பதுதான் சர்க்காரின் உண்மையான சங்கடமாக இருக்கிறது''

The government's real difficulty was that they were unable to make the right choice between western socialism and Gandhism.

* *

கூறியவர் யார் என்று தெரியவேண்டுமா!...அவர்தான் ஆச்சார்யா கிருபாளினி. கூறிய இடம் டேராடூன்.

அவர் கூறிய இந்தக் கருத்துக்கள் திராவிட இன உணர்ச்சியுள்ளோரால் நடத்தப்படும்...லிபரேட்டர்...என்பவை போன்ற ஆங்கில ஏட்டிலிருந்து இதை எடுத்துப் போடவில்லை!

''அவர்களுக்கு வேறு வேலை என்ன? நம்மைப்பற்றி வசை புராணம் தொடுப்பதைத்தவிர''...என்று நம் மீது குறைப்பட்டுக்கொள்வார்கள் என எண்ணியே,முப்புரியாளரின் முரசமாக அமைந்திருக்கும் ''இந்து'' என்ற ஆங்கில ஏடு, மே...24-ல் வெளியிட்டுள்ள செய்தியை எடுத்துப் போட்டுள்ளோம் காங்கரஸ் பூந்தோட்டத்தில் பூத்த மலரின்...மணத்தை மற்றோரும் முகரட்டும்—என்ற நோக்கங்கொண்டு!

—''தங்கவேலர்''

(2ம் பக்கத்தொடர்ச்சி)

தனித்தொகுதி முறையைப் பெற்றீர்கள். ஆனால் அது பல சூழ்ச்சிகளால் மாற்றப்பட்டிருக்கிறது. இது உங்களுக்கு ஏற்பட்ட மிக்க கஷ்டமான காரியமே யாகும். ஒரு கணப்பொழுதில் உங்களுடைய வெகு நாளைய லக்ஷியங்கள் தவிடுபொடிசெய்யப்பட்டுவிட்டது. தேசியத்தின் பேரால் நீங்கள் ஏமாந்து விட்டீர்களென்றே கூறுவேன். மற்றவர்களுடைய ''மேல்ஜாதியா'' ருடையபந்தமிருந்தால் பயன் படாதெனக் கருதியே அவர்கள் நீங்கிய தனித்தொகுதியைக்கேட்டீர்கள். பெற்றீர்கள். இப்போது அது நசுங்கி நாசமாய் விட்டது.

ஆலயப்பிரவேஸம்

இதுமாத்திரமல்லாமல் இப்பொழுது தேவாலயப்பிரவேஸம் என்னும் பேரால் உங்களைப் படுகுழியில் தள்ள ஏற்பாடாகி விட்டது. அதுதான் இந்துமதப் பிரசாரம். உங்களை ஹரிஜனங்கள் என்றழைப்பது ஓர் அர்த்தமற்ற ஏமாற்று வார்த்தை. நீங்கள் ''எனக்குக் கோவில் வேண்டாம், மதம் வேண்டாம்'' என்று சொன்னபிறகே கோவிலிலும் மதத்திலும் சம உரிமை கொடுப்பதாக ஏமாற்றுகிறார்கள். இந்த ஏமாற்றத்தில் விழுந்தீர்களானால் இன்னும் வெகு காலத்திற்கு உங்களுக்கு விடுதலை இல்லை. அரசியல் சம உரிமை இல்லை. தைரியமாய் மதத்தையும் கடவுள் பிரசாரத்தையும் உதறித்தள்ளுங்கள். உங்கள் விடுதலையும் சம உரிமையும் பொருளாதாரத்தில்தான் இருக்கின்றது. பொருளாதார சுதந்தரம் பெற வழி தேடுங்கள். அதற்கான அரசியல் உரிமை பெறுங்கள்.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என் கரிவரதசாமி. தமிழன் அச்சகம் 59. கச்சேரி வீதி, ஈரோடு.

ரோஜா முத்தையா